www.padippakam.com

வேலணையூர் - பொன்னண்ணா

# நெஞ்சத்து நெருப்பு



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சத்து நெருப்பு

கவிஞர்

**வேலணையூர் - பொன்னண்ணா**

(ஆறாவது கவிதைத் தொகுப்பு)

வெளியீடு

திருமதி. பொன்மணி
"அறிவகம்"
டென்மார்க்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

நெஞ்சத்து நெருப்பு


- நெஞ்சத்து நெருப்பு
- வேலணையூர்-
  பொன்னண்ணா
- முதற்பதிப்பு
  01.06.2004
- வெளியீடு
  திருமதி - பொன்மணி
  "அறிவகம்"
  டென்மார்க்
- அச்சமைப்பு
  நிலா பதிப்பகம்
  கிளிநொச்சி.

விலை -

www.padippakam.com

## சிறப்புரை

**க. இராஜமனோகரன்**

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!!*

*பெண்ணுக்கும் பொன்னுக்கும் பேதலிக்கும் இளவயதில்*
*மண்ணுக்காய் உயிர் கொடுத்த எங்கள் இளங் குருத்துக்கள்...*

கார்த்திகை இருபத்தியேழின் மாவீரர் அஞ்சலியாக, கவிஞர் வேலணையூர்ப் பொன்னண்ணா அவர்கள் டென்மார்க் நாட்டிலிருந்து வரைந்த பா வரிகள் இவை. உண்மையை உரைக்க இவற்றைவிட வேறும் வரிகள் உண்டா!

*உத்தமர் போல் நடித்து*
*உலகத்தை நம்ப வைக்கும்*
*உலகப் பெரும் நாடுகளோ...!*

மீண்டும் உண்மை பேசுகிறார் கவிஞர். உலக நாடுகளுக்குத் தாமே பாதுகாப்பு என்றும் தாமே காவலர்கள் என்றும் உலகை ஏமாற்றி அதே உலக நாடுகளுக்கு ஆயுத விற்பனை செய்யும் அத்தனை நாடுகளையும் கவிஞர் சாடுவது யாரையும் கவரும் விதத்திலே அமைந்துள்ளது.

இவ்வாறு உண்மையை உரைப்பதற்குத் தமிழீழக் கவிஞராலேயோ அல்லது தமிழீழம் போலே விடுதலை காண விழையும் நாடுகளின் கவிஞராலேயோ மட்டுமே முடியும்.

நாம் பிறந்த நாட்டின் நிலையை எண்ணி வாடாத தமிழர் தமிழரல்லர்.எழுதாத கவிஞர் கவிஞரல்லர். இரண்டையும் உண்மையாக்கிய பலரிலே பொன்னண்ணா ஒருவர். அவர் அத்துடன் நின்றுவிடவில்லை. நாடொன்றின் அல்லது இனமொன்றின் விடிவுக்கு முக்கியமானவை இரண்டு ஒன்று தலைமை. மற்றது ஒற்றுமை. தலைமை தானே உருவாகுவது எமக்கு உருவாகியும்விட்டது. ஆனால் ஒற்றுமை இன்னும் கேள்விக்குறியே. அதனை நன்குணர்ந்த கவிஞரின் வரிகள் நேர்வழி உரைக்கின்றன!...

படிப்பகம்

# சிறப்புரை

கலைமாமணி இராஜமனோகரன்

*வேற்றுமையின் துயர் புரிந்துவிட்டோம்*
*வேங்கைகள் பாதை சேர்ந்துவிட்டோம்...*
*என்றும்*
*ஒன்று பட்டோம் ஓரணி வந்தோம்*
*எம்பணி செய்திடுவோம்*
*உள்ளம் திறந்தோம் உண்மை உணர்ந்தோம்*
*ஒற்றுமை ஆகிவிட்டோம்...*

*என்று கவிஞர் தன் அழுத்தமான வரிகளை இங்கு பதித்துள்ளார்.*

*கவிஞர் பொன்னண்ணா இன்று தமிழுலகம் நன்கறிந்த ஒரு கவிஞர். வயதாலும் அனுபவத்தாலும் என்னிலும் மிக்கவர். அவர் எழுதும் நூலுக்குச் சிறப்புரை எழுதுவதிலே நான் பெருமை அடைகின்றேன். மிகவும் அன்பாகப் பழகும் கவிஞர் அவர். இன்னும் பலகாலம் நலமுடன் வாழ்ந்து மேலும் பல படைப்புக்களைத் தமிழன்னைக்குச் சூட்ட இறையருள் என்றும் துணை நிற்க வேண்டிப் பணிகின்றேன்.*

அகதியாகி இடர்படவா
வெளிநாடு ஓடிவந்தேன்
வெளிநாடு தேடிவந்தேன்!
எண்ணித்தான் பார்க்கிறேன்
என் தாய் மண்காட்சிகளை!

எண்ணித் துடிக்கின்றேன் இதயத்தால் எப்போதான்என் தாய் மண்ணை நான் மிதிப்பதென்று என அயல்நாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழரின் இதய ஏக்கத்தை இவருடைய கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.தீபாவளி பற்றி கவிதைகள் ஈழத்தமிழரின் இதய ஒலியை உள்ளது உள்ளபடி எதிரொலிக்கிறது.

ஒளியிழந்து வழி இழந்து
உறங்கிடவும் இடம் இழந்து
தறிகெட்டுத் திரிகின்ற தமிழர் நாங்கள்
ஒளியேற்றி மகிழ்ந்திடுதல் எப்போ?

அகதித் தமிழன் என்ற
அடிமைத்தனப் பெயரோடு
அடுத்தவன் தேசத்தில் சிறு பாதி
சொந்த தேசத்தில் பாதி
சாமம் வரை
சுதந்திரமாய் தூங்காமல் பாதி
நடந்திடவே முடியாத
அடிமைத் தமிழனாய் மீதி!
சொந்த வீட்டிலும் குந்தமுடியாமல்
குந்தி இருக்கிறான் நேவி!

முன்னுரை

வல்லிக்கண்ணன்

அடைக்க முடிந்திட்டால்!

தமிழீழ மண்ணுக்கு விடியும் விடியலைத் தடுக்கலாம்.

என்று கவிஞர் அறிவுறுத்துகிறார் – புதிய புறநானூற்றுப் போர்புரிவதற்காகத் தமிழர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் ஊக்குவிக்கின்றார்.

வஞ்சகம் வாழ்ந்ததாய் வரலாறு இல்லையடா?
ஏமாற்றும் நினைப்பு இனியும் பலிக்காது – தமிழர்
விழிப்புணர்வு ஒன்றேதான் வெற்றியின் எல்லையடா
நெஞ்சுக்குள் தீ வளர்த்தோர் தோற்றதாய் சரித்திரம் கண்டாயா?
நிச்சயம் வெற்றியும் விடுதலையும் உந்தனுக்கு நிச்சயமே!
வீரத் தமிழ் மறவர் வென்றிடுதல் உன் பலமே!

என்று அவர் நாவலிக்கிறார்.

போரில் மடிந்த மகனை நினைத்து அழும் வீரத்தாயின் உணர்வலைகள், தாய் மண்ணைவிட்டு அயல் தேசம் புகுந்தவருக்கு பாட்டி எழுதிய கடிதம், தாய் மண் காட்சிகளை எண்ணிப்பார்த்தல்,மண்ணின் `நினைப்பு போன்ற கவிதைகள் நாட்டுப்பற்றை விவரிக்கும் உணர்ச்சிகரமான பதிவகளாக விளங்குகின்றன.தாய் மண்ணின் இனிமைகளை நினைவுகூரும் கவிதைகளுக்கு சான்றாக ஒன்றை குறிப்பிடலாம்.

முத்துப்பந்தலில் ஆடும்
முல்லை மணம் கமழும்
விடியலைத் தெரிவிக்க அம்மன்
கோவில் மணி ஒலிக்கும்
வெள்ளை வேட்டி நேசினல்.
சேட்டுடனே அப்பா புறப்பட்டு
கடை திறக்கும் காட்சி தினம்
கண்ணில் வரும்!
(இப்படி )எத்தனையோ கண்மறவாக் காட்சிகள்
இத்தனையும் விட்டகன்று

www.padippakam.com

# முன்னுரை

கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா தமிழ் இனம்,தமிழ் மொழி,தமிழ் மண்பற்று மிகுதியுடையவர் .மனிதநேயம் வளர்ப்பவர்.மனிதருக்கு தீமையும் கொடுமையும் விளைவிக்கின்ற, ஆணவமும் அதிகாரமும் பணச்செருக்கும் கொண்டு நாசச்செயல் புரிகின்ற வெறியர்களை வெறுப்பவர்.அன்பையும் அமைதியையும்,உலக மக்களின் வளமான வாழ்வையும் விழைகிறவர். அவருடைய இவ் உயர் பண்புகள் அவர் எழுதியுள்ள கவிதைகளில் நன்கு வெளிப்பட்டுள்ளன.

ஆணவ அதிகார இதயத்தோடு,பிற நாடுகளின் மீது போர் தொடுத்து அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும்சதிகார நாட்டின் போக்கைக் கண்டனம் செய்து அவர் பாடியிருக்கும் கவிதை,எப்போதான் மனிதனாவாய் குறிப்பிடத் தகுந்தது.இரு நாடுகளுக்கிடையே சண்டை எழுகிற போது, செத்து மடிவது சாதாரண மக்கள் தான்,அதிகார பீடத்திலிருந்து ஏவுகிற ஆணவக்காறர்கள் அல்ல.இதை கவிஞர் நன்கு அறிவுறுத்துகிறார் கவிதையில்

சாகப்போகிறவர்கள் அப்பாவி மக்களும்
இருநாட்டுப் படைகளும்தான்!
நீயோ அவனோ அல்ல,
மரணத்தை எதிர்பார்த்து வாழாத இவர்கள்
உன் ஆணவத்தால், உன் பிடிவாதத்தால்
மரணிக்கப் போகின்றார்கள்!
உனக்குள் இருளில் இருக்கும் அந்த
நான் என்ற கொடிய மிருக அரக்கன்
உனக்குள் உள்ளவரை-நீ எப்படி
எப்போது மனிதனாகப் போகிறாய்?

உலகுக்குப் போதனை செய்திட்ட காந்தியர் ஒளி வீசிய நாட்டில்-அண்ணல் காந்தியார் பிறந்திட்ட மண்ணில் இன்று மதத்தின் பெயராலும்,அரசியலின் பெயராலும் நடத்தப்படுகிற கொடுமைகளும் அப்பாவி மக்கள் அனுபவிக்க நேரிடும் அவலங்களும் சீரழிவுகளும் கவிஞரின் உள்ளத்தில் வேதனை எழுப்புகின்றன.அந்த உணர்வோடு காந்தியம் மணக்கின்றதா? என்ற கவிதையை அவர் படைத்திருக்கிறார்.

வல்லிக்கண்ணன்

www.padippakam.com



இந்திய தேசம் முழுவதும் இன்று
மதத்தால் மதம் பிடிச்சாச்சு – தலைவர்கள்
அரசியல் கட்சிக் கொள்கையால் அதை
மக்களுக்குக் கரைத்துக் கரைத்துக் கொடுத்தாச்சு

என்று உண்மை நிலையைச் சுட்டுகிறார் அவர்.

தமிழரின் தாய்த் தேசமான தமிழ் நாட்டின் நிலை தாழ்ந்தவிட்டதையும் அவர் வேதனையோடு கவிதையாக்கியிருக்கிறார். மானத்தைக் காத்திட துணிவுமில்லை,தமிழ் மானத்தை பேசிடத் துணிவுமில்லை என்றும் மக்கள் தமிழ்க்குருதி இல்லாத தமிழ் சினிமாக் கவர்ச்சியில் மயங்கிக் கிடப்பதையும் அவர் எடுத்துச் சொல்கிறார்.

தமிழ்ச் சங்கம் வைத்தாண்ட தமிழன் – இன்று
தாழ்வான சினிமாக் கவர்ச்சிக்குள் இழந்திட்டான் தன்னுணர்வை
என்னினத்துக்கு உதவிடவே முடியுமா தாய்த்தமிழின்

தலைகுனிவு வாழ்க்கைக்குள் சிலையாகிவிட்டான் என பரிதாபப்படுகிறார் கவிஞர். ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் பற்றியும்,ஈழத் தமிழ் மக்கள் தங்கள் மண்ணில் அவதிப்படுவதையும் அயல்நாடுகளில் அகதிகள் என்ற பெயருடன் வாழ நேரிட்டதையும் பற்றி அவர் உணர்ச்சிக் கவிதைகள் பல இயற்றியிருக்கிறார். ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும்,தமிழ் ஈழம் மலரும் என்று நம்பிக்கையோடு குரல் கொடுக்கிறார் அவர்.

கடலுக்கு தடைபோட முடியுமா
அலை மோத வேண்டாமென்று
சுடுமணலுக்கு தடைபோட முடியுமா
சுட வேண்டா மென்று?
விடிகாலைக் கதிருக்கு துணிபோட்டு
மறைத்திட முடிந்திட்டால்!
அடிமாலைநிலவை குண்டான்சட்டிக்குள்

www.padippakam.com

## முன்னுரை

*இந்த நிலையில் தமிழன்*
*கோயிலுக்குப் போவானா?*
*கோடி உடுப்பானா?*
*தீபமேற்றி தீபாவளி கொண்டாடி*
*மகிழ்வானா?*
*தீயவன் அழிந்தால் தானே தீபாவளி?*

*இவ்விதம் இனத்துக்காக, இனத்தின் சுதந்திர விடியலுக்காக, மனிதர்கள் மனிதர்களாய் வாழ்வதற்கான நிலைமை விடியவேண்டும் என்பதற்காக, நெஞ்சில் கனலும் உணர்வுகளைக் கவிதைகளாக்கியிருக்கிறார் வேலணையூர் பொன்னண்ணா. விழிப்பு, உணர்வு ஊட்டக்கூடிய கவிதைகள் அவை.கவிஞருக்கு என் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.*

*வல்லிக்கண்ணன்*
*இலக்கிய முனிவர்*
*வள்ளலார் குடியிருப்பு*
*தமிழ் நாடு*

வல்லிக்கண்ணன்

படிப்பகம்

www.padippakam.com

என் அன்பு வாசக பெருமக்களே..! வணக்கம்.

காலச்சுவடு என்பது மனிதனின் செயலாக்கங்களின் பதிவு. அதே போல் இலக்கியச் சுவடும். ஒரு மொழியால். அந்த மொழியை பேசும் இனத்துக்கு ஈந்திருக்கும் இலக்கியப் பேழைகளின் பதிவேயாகும். கடந்து போன வாழ்க்கை வரலாற்றை, சமூகம் சந்தித்த இன்பதுன்பங்களை, வாழ்க்கை வழிமுறைகளை, வருங்கால சமதாயம் அறிந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தேடல் செய்த வேளையில் என் நெஞ்சத்தை கிழித்து எரித்த நெருப்பே என் பேனாமுனையில் இருந்து புறப்பட்ட இந்தக் கவிதை வரிகளாகும்.

வரலாற்றில் இருந்து தமிழினத்தை வெளியேற்றவேண்டும் என்ற வேட்கையுடன் புறப்பட்டு சீறி நிற்கும் சிங்கள இனவாதத்தின் செயற் பாடுகளும். அதை உரம்போட்டு வீச்சாக வளர உதவி செய்யும் இந்திய அரசியல் செயற்பாடுகளும் தமிழக சினிமா கவர்ச்சியுடன் செயற்படும் விதங்களோடு. உத்தமனாய் நடித்து உலகத்தை ஏமாற்றும் உலக அரசியல் தலைமைகளும் தாம் கடந்து செல்லும் பாதைகளில் கடந்து செல்லும் மனித உடலை மதிக்கா தன்மையும். ஆயுத முனையில் ஆட்சி நடாத்தும் விதிமுறை கண்ட ஒரு இலட்சிய வேட்கை கொண்ட எழுத்தாளன் அவன் பேனா முனைக்கத்தியை அதன்பலத்தை சமூகத்தின் முன்னே வைக்க வேண்டியது அவன் கடமை என்ற சிந்தனையின் வெளிப்பாடே இந்த நெஞ்சத்து நெருப்பு என்ற கவிதைத்தொகுப்பாகும்.

எழுத்து வலிமையானது. மிகமிக கூர்மையானது. உணர்வலைகளை ஏற்படுத்த வல்லது. அதிர்வலைகளை உருவாக்கும் சக்தி கொண்ட இதை வைத்துப்பார்க்கையில் எழுத்தாளனும் ஒரு சமூக கட்டுமான பொறுப்பாளன் ஆகின்றான். இந்த நிலையில் என் தாய் மண்ணில் வாழ்ந்த காலத்தில் நான் கண்ட, அனுபவித்த, ஆனந்த வாழ்க்கைக்கு பங்கம் செய்து அடுத்தவன் தேசத்தில் அகதி அட்டையும், அவலப்படும் அவஸ்தைப்படும் இந்தக்கொடிய நிலைக்கு என்னை, எனது இனத்தை ஆளாக்கிய அந்தச் சிங்கள பேரினவாத கொடுங்கோலன் மீதும் அவனின் கொடுமைமிக்க ஆளுகை மீதும் என் கோபம் வரக் கூடாதி இந்த உள்ளத்து உணர் வலைகளே நெஞ்சத்து நெருப்பு என்ற கவிதைத் தொகுப்பின் ஆரம்பப் புள்ளியாகும்.

எரிமலை குமுறும் போது தான் அந்த மண்ணுக்குள் புதைந்துள்ள வளங்கள் வெளியே வருகின்றன. அதேபோல்தான் ஒரு எழுத்தாளனின் நெஞ்சு குமுறி எரியும் போதுதான் அவன் உள்ளத்து உணர்வலையின் வளம், வீச்சு வெளிவருகின்றது இதே நிலைதான் இதுவும். எழுந்த வார்த்தைகள் கோர்வை ஆகாது. அது சிந்தனையின் ஜீவ ஊற்றாகும். ஒரு எழுத்தாளன் பூரன

என்னுரை

பொன்னண்ணா

www.padippakam.com

என்னுரை

பொன்னண்ணா

சுதந்திரமானவன். அவனை சிலர் திட்டமிட்டு சிறையில் அடைக்கலாம். ஆனால் அவனின் சிந்தனையை, அவன் உள்ளத்து உணர்வுகளை எந்த சக்தியாலும் அடக்கி விட முடியாது. அவன் மரணிக்கலாம் .ஆனால் அவனின் எழுத்து காலம் காலமாக வாழ்ந்து கொண்டே இருக்கும்.

இது எனது ஆறாவது தொகுப்பாகும். முன்னைய படைப்புகள் உள்ளடக்கப் பட்டுள்ளன. காரணம் இது என்தாய்மண்ணில் பிரசுரமாகி அந்த மண்ணின் மைந்தர் கரங்களை எட்ட இருப்பதால் இதன் வீச்சு வலுப்பெற்றதாக இருக்கின்றது. முன்னயவை புலம்பெயர் வாழ்வின் வரலாற்றைச் சுமந்தவைகள் என்றால் அது உண்மையே..! இந்த படைப்புக்கு வழமையாக கரம்கொடுக்கும் அன்புத்தம்பி முல்லையூரான் அவர்கள் கரம்நீட்ட முடியாத நிலைகண்டு பெரும்துன்ப ச்சுமையோடு. இந்த நூலுக்கு பெருமை சேர்க்க கரம் நீட்டிய அன்புத்தம்பி ஆசிரியர் கே. எஸ் துரை அவர்களுக்கும். பிரபல எழுத்தாளர் தமிழ் இலக்கிய முனிவரான தமிழக மதிப்புக்குரிய அண்ணர் கவிஞர். வல்லிக்கண்ணன் அவர்களுக்கும். லண்டன்வாழ் அன்புத்தம்பியும் கவிஞர் கந்தையா இராஜமனோகரன் அவர்களுக்கும். மற்றும் தமிழக பெருமதிப்புக்குரிய உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் கலைமாமணி அவர்களுக்கும். எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவிப்பதோடு இந்தத் தொகுப்பை திறம்பட உருவாக்குவதற்கு பெரும்துணையாய் இருந்த நிலா வெளியீட்டகத்தாருக்கும். என் அன்பு கலந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

• •

படிப்பகம்

கடுமையான இரும்பு மதில்களைப் போட்டு, நாமே இலக்கியவாதிகள் இதுவே இலக்கியமென வாழும் நமது இலக்கியக்காரரிடையே, நீங்கள் மட்டுமல்ல நானும் இலக்கியவாதிதான் என்று இரும்புச் சுவர்களை இடித்துக் கொண்டு உள்ளே வந்திருப்பவர் வேலணையூர் பொன்னண்ணா.

நாகதாளியம், நெருஞ்சி முட்களுமாய் பற்றைகட்டிப் போகாமல் நம்மவர் படைப்புத் தோட்டத்தில் பயன்தரு மா, பலா, வாழை மரங்களை சிலர் நெற்றி வியர்வை சிந்தி நட்டு வருகின்றார்கள். அத்தகைய படைப்பாளிகள் வரிசையில் பொன்னண்ணாவும் ஒருவர். எண் திசைகளிலும் தலையை உருட்டி எதை எழுதுவது கவிமணி சொன்னது போல உள்ளத்தில் உள்ளதை அப்படியே வாய்ப்பெனத் திட்டமிட்டு எழுதுவது அவர்குணம் யாரையும் பார்க்காது கணினியைத் தரும் வாழைபோல அவர் கவிதைகள் தாமாகக் கனிந்து இறைபவை.

ஒடுக்குமுறையென்பது தூணிலும் துரும்பிலும் இருப்பதாகக் கூறப்படும் இறைவனைவிட ஒருபடி அதிகமாகவே எங்கும் நிறைந்து கிடக்கிறது. அதை விலத்த நாம் பாடுபட வேண்டும் என்ற உறுதியுடன் வீதிக்கு வந்து கதவைத் தட்டுகின்றன. பொன்னண்ணா பாடல்கள். எல்லாவற்றையும் எரிப்பது நெருப்பு. அதனால்தான் தன்கவிவரிகளுக்கு நெருப்பாடை அணிந்து இத்தொகுதியில் நெருப்பு ஊர்வலம் வருகிறார்.

ஈழத் தமிழினம் சிந்தும் கண்ணீரைக் கரைக்கும் காற்றாக வேண்டும். கவிதை தமிழர் கைகளிலும், கால்களிலும் விலங்கு பூட்டப்பட்டுள்ளது என்று எழுதியது ஒரு காலம். துருப்பிடித்த சங்கிலியாய் தமிழரின் மனங்களிலும் இப்போது நிறை பாரமாய் விலங்கு இருக்கிறது. தன் கவிதைகளால் அதை உடைக்க வேண்டும் என்கிறார். மனவிலங்கை உடைக்க கவிப்பட்டம் சுமந்தோரால் இயலவில்லை இதோ என் வரிகளென காத்திரமாக தந்திருக்கிறார். ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே என்ற ஆவல் மின்னுகிறது அவர் உள் மனதில்.

வாழும் மட்டும்தான் வாழ்வு அந்தவாழ்வுதான் நம்பிக்கையின் ஒரு அடையாளம். வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் நம்பிக்கை மலர்களை வீசியிருக்கிறார். நம் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக பாடப்படும் அத்தனை பாடல்களும் வெற்றிப் பாடல்களே. பொன்னண்ணாவின் இத்தொகுப்பும் வெற்றிப் படைப்பாகும் என்பதில் இரு கருத்துக்கிடமில்லை.

அணிந்துரை

கி. செ. துரை

www.padippakam.com

# சமர்ப்பணம்

என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு.

என்ற பொய்யாமொழிப் புலவன் வள்ளுவனார்குள் எண்ணி
என் இதயத்தில் என் இலக்கிய வளர்ச்சிக்கு புலத்தில்
கரம் தந்து உணர்வூட்டி, ஊக்கம் தந்து உறுதுணையாய்
நின்று என் இதயத்தில் குத்து விளக்காய் நிற்கின்ற என் அன்புத்தம்பி
முல்லை மண் பெற்றெடுத்த முடிசூடா கவி மன்னன்
டென்மார்க்கின் இல்க்கிய முன்னோடி மக்கள் பலம்
கொண்ட பண்பாட்டு மன்னன். இலக்கிய வாதிகளை, தமிழ்
உலகம் வளர்த்தெடுத்துவரும் கால சமூகத்துக்கு விட்டுச்செல்வதே
தமிழ்ப்பணி என்று தன்வாழ்நாளில் தமிழ்ப்பணி தொடர்நத இலக்கிய கர்த்தா
என் அன்புத் தம்பி கவிஞர் முல்லையூரான் அவர்கள்
நோய் அரக்கன் கரம்பட்டு மிறத்துடித்தபடி வாய் ஒலியை இழந்து
கண்ணால் கதைத்தபடி என்னை காவல் செய்யும் தம்பிக்கு
அவர் பாதத்தில்
இந்தநெஞ்சத்து நெருப்பு என்ற
கவித்தொகுப்பை
சமர்ப்பணம் செய்கின்றேன்.

www.padippakam.com



# பிரியாவிடை...!

ஆண்டான இரண்டாயிரத்தி மூன்றே
அசத்தி விட்டாய் போ அகிலத்தை.
நடக்குமா. !என்று மக்கள் நினைத்ததை
நடத்தியே காட்டிவிட்டாய் ஈராக்கில்.
அசத்தி விட்டாய் போ அகிலத்தை.
போய் வா ஆண்டே புன்சிரிப்போடு.

உலகத்தின் பெரும்சபை மறுத்தபின்னும்
உலகவல்லரசு நாடு மூன்று எதிர்த்தபின்னும்
தன் சண்டித்தனத்தை காட்ட வைத்தாய்.
தலைகனத்த புஸ்சை பப்பாளிமரத்தில் ஏத்திவிட்டாய்
அசத்தி விட்டாய் போ அகிலத்தை.
போய்வா ஆண்டே புன்சிரிப்போடு.

ஆண்டிரண்டு பத்து காடு வாழ்ந்த எம்புலியை
அகிலமெல்லாம் பயங்கரமாய் பார்த்திருந்த எம்புலியை
நாடுவிட்டு நாடுவந்து தாய்லாந்தில் பேசவைத்தாய்,
உலகத்தார் முன்னிலையில்
உண்மைதனை வெல்லவைத்தாய்
அசத்திவிடாய் போ அகிலத்தை
தாயே போய்வா நீயும் புன்சிரிப்போடு.

பயங்கரவாதியென்றும் பச்சைப் பொய்யரென்றும்
பழிவாங்க தேடித்திரிந்தார் சிங்களத்தார் அரசு.
பட்டுக்கம்பளம் விரித்து வரவேற்க வைத்தாய்
கடல்விமானம் தானனுப்பி கைகுலுக்கிப் பேசவைத்தாய்.
அசத்தி விட்டாய் போ - அகிலத்தை
போய் வா தாயே புன்சிரிப்போடு.




படிப்பகம்

www.padippakam.com



புத்தரின் சீடரெல்லாம் பொம்மையை எரித்திட
தேசியக் கொடியை பேரினவாதம் எரித்திட
ஓட்டலின் முன்னால் ஊரெல்லாம் கூடியே
தடுத்திட நினைத்ததை நடத்தியே காட்டினாய்.
எங்கள் திருநாட்டு மன்னன் அகிலம்தெரிந்த தலைவன்
பொங்கு தமிழர் படையின் புடம்போட்ட தலைவனுக்கு
பிறந்தநாள் வாழ்த்துரைக்க ஐரோப்பா நாட்டு
அதியுயர் தலைவன் பறந்து சென்று வாழ்த்த வைத்தாய்
அசத்தி விட்டாய் போ அகிலத்தை
போய் வா தாயே புன்சிரிப்போடு.





படிப்பகம்

www.padippakam.com



# எப்போதான் மனிதனாவாய்...!

நீ எந்த பிரபஞ்சத்தில் இருந்தும்
சுயம்புவாக வரவில்லை.
கருப் பையும் கருவறையுமே
உனது நதி மூலங்கள்.

பகலும் இருட்டும்
விழித்தலும் மூடலும்
ஆணவமும் அதிகாரமும் பணச் செருக்கும்
என்ற பிரபஞ்ச மானிடம்தான் நீயும்.

இதை நீ தீர்க்கமாய்க் காண மறுக்கிறாய்
இந்த உண்மையை உணர மறுக்கிறாய்
உன் அதிகார அரியணை
உன்னைப்போல்தான் உன் எதிரியும்
இருப்பானென ஏன் எண்ண மறுக்கிறது
உன் ஆணவ அதிகார இதயம்

வியட்னாமில் படித்த பாடம் போதாதா.
இதை எண்ண மறந்தாயானால்
நீ இருக்கும் அரியணைக்கு ஆயுள்
மிக மிக நெருக்கமாக குவியும் வீழ்ச்சி.

வாழ்வின் பிடிப்பகன்று, சுமைகொண்ட
துயரில் கரைகிறாய் தினமும் நீ.
உலக சபை உறைக்கச் சொன்ன போதும்
உனக்கேன் இந்த பிடிவாத சிந்தனை?



படிப்பகம்

www.padippakam.com



நிர்ப்பந்தங்களுக்காகவும், போலி கௌரவத்துக்காகவும்
பணத்துக்காகவும் நேசிக்கிறாய் நீ மரணத்தை.
மரணத்தோடு கைகுலுக்க யாருக்குத்தான்
துணிவு வரும். மனம் வரும்.
அதனால்தான் உன்னொடு கைகுலுக்கியவர்கள்
உன்னோடு கூடியிருந்தவர்கள்
உன்னைத் தள்ளி விட்டு எட்டச் செல்கிறார்கள்
தெரிந்தும் ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறாய்

ஒரு நேசிப்புக்காகவும் மரணத்தை
உன்னால் புரிந்துகொள்ள முடிகின்றதா..!?
மரணமும் ஜனனமும் வெவ்வேறானவை அல்ல.
ஒரே ஊசியில் இரண்டு முனைகள்.
மானிட வாழ்க்கையும் அப்படியே.
எதிலும் அதே நிலையில்தான்.

மரணத்தை எதிர்பார்த்து
அவர்கள் வாழவில்லை.
உன்னால் பாதியில்
மரணிக்கப் போகின்றவர்கள் இவர்கள்.
சாகப் போகின்றவர்கள் அப்பாவி மக்களும்
இரு நாட்டுப்படைகளும் தான்.
நீயோ அவனோ அல்ல.

மரணத்தை எதிர்பார்த்து வாழாத இவர்கள்
உன் ஆணவத்தால் உன் பிடிவாதத்தால்
மரணிக்கப் போகின்றவர்கள் இவர்கள்.

உள்தேடலும் திட்டமும் எதுவரை நீள்கிறது!?
உனக்குள் இருளில் இருக்கும் அந்த
நான் என்ற கொடிய மிருக அரக்கன்
உனக்குள் உள்ளவரை நீ எப்படி
எப்போது மனிதனாகப் போகிறாய்..!?
இப்போது சொல் நீ மனிதனா, மிருகமா!?
மனிதனா!? மிருகமா!? மனிதனா!? மிருகமா..!?



படிப்பகம்

www.padippakam.com



# காந்தி பெற்றார் சுதந்திரம் ஆனால் காந்தியம் மணக்கின்றதா

உலகுக்கு போதனை செய்திட்ட காந்தியம்
சொந்த ஊருக்குள் மணக்கின்றதா. ?
அண்ணல் காந்தியர் பிறந்திட்ட மண்ணது
ஆயிரம் முனிவர்கள் வாழ்ந்திட்ட மண்ணது- அங்கே
அகிம்சை நெறியும் இருக்கின்றதா
மானிட அகிம்சை நெறியும் இருக்கின்றதா.

புண்ணியம் தேடிட கோவில்களாயிரமாயிரம்
மலையாய் உயர்ந்தே நிற்கின்றன . தமிழர்
இதயம் தன்னில் பட்ட கோடி வடுக்கள்
மண்ணில் மறைந்தே கிடக்கின்றன! பொடா
மண்ணில் மறைந்தே கிடக்கின்றன.

சுடுபட்ட காந்தி பிறக்கவில்லை - அவர்
போதனை அங்கே வளரவில்லை - கோட்சே
தொங்கிய கயிற்றிலே ஆயிரம், ஆயிரம்
கோட்சேக்கள் கூடிப்பேசி பிறந்தாச்சு.
இந்திய தேசம் முழுவதும் இன்று
மதத்தால் மதம் பிடித்தாச்சு தலைவர்கள்
அரசியல் கட்சி கொள்கையாய் அதை
மக்களுக்கு கரைத்துக், கொடுத்தாச்சு.

சிந்திய குருதியை மறந்திட்ட தலைவர்கள்
வெற்றித் தேர்வடம் தானே இழுத்தாச்சு.
தெய்வமாய் கட்சித்தலைவரை காட்டி
மதத் தீயையே மூட்டி விதைத்தாச்சு..!
வேதங்கள் எல்லாம் தெரிந்திட்ட தலைமை
வெட்டியே வீழ்த்துது மனித உடலை
வெற்றியை மட்டுமே வேதமாய் நினைக்குது
காந்தியம், கதருடை, கண்ணியக் குல்லா.




படிப்பகம்

www.padippakam.com



வேதங்கள் எல்லாம் உயிர்களை வீழ்த்த
ஏட்டில் விதிமுறை சொல்லியா இருக்கு.
கண்ணியமிக்க காந்திமகான் சொன்ன சுதந்திரம்
கடுகளவேனும் இந்திய மண்ணில் தெரியுதா?
காட்டு விலங்கினம் ஊழையிடும் காடாய்
நாடாளுமன்ற நடப்பு செய்திப் பேப்பரில் நாளும்
கண்ணியத் தலைவர்கள் வாழ்கிறார் கம்பிக் கூட்டில்.
மதிகெட்ட பதவி வர்த்தகச் சந்தைகள் நாட்டில்.
மக்கள்நெஞ்சு வலிக்குது! துடிக்குது, துடிக்குது வீட்டில்
சுதந்திர பொன்விழாக்கள் நடக்குது நடக்குது நாட்டில்.





படிப்பகம்

www.padippakam.com



# உலகத் தமிழரின் தாய்த்தேசமா...!?

நான்கு மறை வேதத்தை உலகுக்குத் தந்து
நலிவுற்றுப் போன தேசம்
போர்வீரம் தன்னை உலகுக்குச் சொல்லி
புதையுண்டு போன தேசம்.!

வானத்தில் இருந்து வரவில்லை சுதந்திரம்
வாங்கவே பலர் உயிர் கொடுத்தார்.!
மானத்தை விற்கும் மதிகெட்ட மனிதராய்
சினிமாவுக்கே ஆட்சியைப் பறிகொடுத்தார்.

மானத்தைக் காத்திடத் துணிவுமில்லை - தமிழ்
மானத்தைப் பேசிட துணிவுமில்லை - இனத்துக்காய்
பொங்கிய வைகோ ,நெடுமாறனை சிறைக்குள்ளே.
பூட்டிய அம்மாவின் புன் சிரிப்பில் மயங்கியே
மறு வாழ்வு இல்லத்தில் வரிசையில் நிற்கிறார் பாவம்.

விண்கலம் செய்திடும் விஞ்ஞானி பிறந்த மண்
வேறு வேறாகுதே சாதிக் கட்சிகள் வளர்ச்சியால்.
தமிழர் ஆட்சிக்கு விதைபோட்ட அறிஞர்
அண்ணாவின் பெயர் கொண்ட கட்சி,

தமிழுக்கு தடைபோட்டு, சினிமா ஆட்சி நடத்திட
நடித்திடும் நடிகராய்த் தமிழரே கூடுறார்.!
நாட்டு நிர்வாகம் பழிவாங்கும் காட்சியே நடக்கு!!
தட்டிக் கேட்டிட தன்மானத் தமிழர்! எவருமே இல்லையே!!



படிப்பகம்


www.padippakam.com



தமிழுக்கு தடைபோட்டு! தமிழ்த் தலைவர்க்கு
அடிபோட்டு,தமிழையே அழிக்கிறார்!
தமிழ்க்குருதி இல்லாத தமிழ்ச் சினிமாக் கவர்ச்சி - இதை
தடுத்திட முடியாத தமிழர் பொடாவை தூக்கியே காட்டுறார்.
பொடா என்ன நெருப்பு
தமிழர் சீறிப்பாயும் ஆறாக மாறினால்

பாரதி கனவாக தமிழ்த் தேசம் கண்டிட
பெரிய அண்ணா, தட்டி எழுப்பினார் மக்களை.
தமிழர் உணர்விற்குப் பூட்டிட்டு, உறுதிக்கு விலங்கிட்டு!
அன்னியன் ஆட்சியே நடக்குது, எம் தமிழர் தேசத்தில்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய
எம்மின தமிழர் தேசம் என்று
எழுதிய பாரதி அழுதிடும் நிலையின்று.
ஏன் வந்ததோ என்று அலறுதே தமிழர் நெஞ்சங்கள்
துடிக்குதே! கண்ணீர் வடிக்குதே!
உலகத் தமிழர் கண்விழிகள





படிப்பகம்

www.padippakam.com



# உலகத்தமிழருக்கு தனித்தேசம்...!

தமிழ்ச் சங்கம் வைத்தாண்ட தமிழன் - இன்று
தாழ்வான சினிமாக்கவர்ச்சிக்குள் இழந்திட்டாள் தன்னுணர்வை.
தன்னினத்துக்கு உதவிடவே முடியாத - தமிழன்
தலைகுனிவு வாழ்க்கைக்குள் சிலையாகிவிட்டான்.

உலகத்து மொழிகளுக்கே மூத்தவளாய்
உயர்வுடைய செந்தமிழாய் திகழ்பவளாய்
உரிமைக்காய் உயிர்கொடுக்கும் உத்தமியாய்.
உறுதியுடன் உயந்திட்டாள்
கலப்பற்ற ஈழத்தமிழ்த்தாய்.

கண்ணீர் இல்லாத கண்களும்தான் இல்லை
அலைகள் இல்லாத ஆழியும்தான் இல்லை
இனத்துக்கு துயரென்றால் துடிக்கும் அந்தக் காகம்
தன்னினத்துக்காய் மூச்சுவிட்டு
சிறைவாழும் தாய்த் தேசம்.

கருவறைத் தேசத்தில் முடிவுற்ற தமிழ்ப் பாசச்சோறு
கண்கட்டியாதரவு அரச அம்மாவுடன் பொங்கல் சோறு.
புண்பட்ட தமிழிற்கு தெரியாதா பாசத்தின் வேசம்
நீதிக்கு தெரியாதா பொடாவின் அநியாயம் மறுபக்கம்

கடலுக்குத் தடைபோட முடியுமா அலைமோத வேண்டாமென்று!?
சுடுமணலுக்கு தடைபோட முடியுமா சுடவேண்டாமென்று.
விடிகாலைக் கதிருக்கு துணிபோட்டு மறைத்திட முடிந்திட்டால்
அடிமாலை நிலவை குண்டான் சட்டிக்குள் அடைக்க முடிந்திட்டால்
தமிழீழ மண்ணுக்கு விடியும் விடியலைத் தடுக்கலாம்
ஈழத்தமிழர்க்கு உதவிடும் தமிழரை அடக்கலாம். மக்கள்
சுதந்திரத்தை சட்டத்தால் அடக்கிடத்தான் முடியுமா?
சூரியனை குடுவைக்குள் மூடிவைக்க முடியுமா?




படிப்பகம்

www.padippakam.com



உலகத்தார் வரிசையிலே உயந்துவிட்ட ஈழ தேசம்
உரிமைக்கு உரமாக உயிர் கொடுத்த ஈழ தேசம்
தானைத் தலைவன் தம்பி பிரபாவின்
ஆணைக்காய் காத்திருக்கும் ஈழ மறவர் கூட்டம்.

உலகத் தமிழர்க்கு எடுப்பார் தனிஈழத் தாய்த்தேசம்
உண்மையிது நம்பிடுவீர் உலகத் தமிழர்களே
உளுத்தர் சிலர் காட்டுகின்றார் முகமூடி மாயை - மறவர்
உறங்கிடுவார் என்றெண்ணிய
பகல்க்கனவும் மாறும்.





படிப்பகம்

www.padippakam.com



# பாட்டியின் கடிதம்...!

நீலநிற வானம் குடை விரிக்க
நிலத்தை வெள்ளைப் பனி மறைக்க
பனிச்சேற்றை என் கால் மிதிக்க - மனம்
பாட்டி வீடதனைத் தான்நினைத்ததப்போ.

பனிச்சேற்றில் நான் நடக்கும் நேரமெல்லாம்
படர்ந்துவரும் என் தாய்மண்ணின் நினைவலையே.
கோடிபல சேர்த்திடவே ஓடிவந்தேன் தாய்மண்ணைவிட்டு
கோடியேதும் சேர்க்கவில்லை தேடியதோ கோடிதுன்பம்
ஊரெல்லாம் நந்தவனம் என் உள்ளமெல்லாம் வெந்தமனம்
நந்தவனம் பூப்பூக்கும் என் வெந்த மனம் எதுபூக்கும்.

பூத்திட்ட பூக்களெல்லாம் பனிப்பூவாய்க் கரைந்திடுச்சு.
பனிச்சேற்றில் பாதமதை தோய்க்காமல் பறக்கமனம் நினைச்சிடுச்சு.
வந்த கடிதமொன்று பாட்டிவீட்டுக் கதை பகர்ந்திடிச்சு.
சொந்தமென்று எனக்கிருந்த சொத்தும் கரைந்திடுச்சு.
பாட்டன் நடந்த அந்த படிக்கட்டில் என்நினைப்பு
மாதாவின் சுமையிறக்கி பூமிமாதாவின் சுமையான
என்னுடலும் அக்குந்தில் உருண்ட நினைப்பாச்சு!
என்றந்த மண் காண்பேன் மனம் ஏங்கும் நிலையாச்சு.

காலைக்கதிரவன் கதிரொளி என் மேனிபட
கால்முதல் தலைவரை பூசிய எண்ணையோடு
ஓலைத் தடுகில் எனை வளர்த்திய என் பாட்டி
ஓலை எழுதி தந்தாளே என் சொத்தென்று தாலாட்டில்
கோடிபலசேர்க்க ஓடிவந்த எனை வழி அனுப்பி வைத்த
நினைவுகளை அடுக்கடுக்காய் நெஞ்சோரம் குவிக்கையிலே
நெஞ்சுக்குள் அடுப்பிலிருக்கும் சோற்றுலையே பொங்கிவழியுதடா
நெஞ்சுக்கள் பெருநெருப்பே சுடர் விட்டு எரியுதடா.



படிப்பகம்

www.padippakam.com



அன்று கொள்கைக் குமரர்கள் குந்தி இருந்ததால்
குண்டுகள் போட்டு கொழுத்தி எரித்தனர்.
மாம்பழத் தோட்டத்தில் நரியார் செயல் போல்
பரம்பரை வீடு சுடுகாடாய்ப் போனதுவாம்.
பாட்டி கடிதமிது பரம்பரைக்குத் தெரியட்டும்!

வஞ்சகம் வாழ்ந்ததாய் வரலாறு இல்லையடா
ஏமாற்றும் நினைப்பு எனியும் பலிக்காது! தமிழா.
விழிப்புணர்வு ஒன்றேதான் வெற்றியின் எல்லையடா.
நெஞ்சுக்குள் தீவளர்த்தோர் தோற்றதாய் சரித்திரம் கண்டாயா?
நிச்சயமாய் வெற்றியும் விடுதலையும் எங்களுக்கு நிச்சயமே!
வீரத் தமிழ் மறவர் வென்றிடுதல் பலமே.





படிப்பகம்

www.padippakam.com



# எண்ணித்தான் பார்க்கின்றேன் தாய் மண் காட்சிகளை...!

கொத்துக் கொத்தாய் கொடி செடிகள்
குலைகுலையாய் இளநீர்கள்
காடாய்க் கண்ணுக்கு கனிகொடுக்கும்
மா, பலா, மாதுளை பழத்தோப்புகள்
வாழை வளைந்தங்கே குலைதள்ளும் - அடி
வளவினிலே வேப்பமரம் பூச்சொரியும்
பாளை வந்த பனைமரத்தில் கள்ளுவரும்.
பார்க்கையிலே இவையெல்லாம்
இதயத்து நந்தவனம்

காளையொடு பசுஒன்றித்தான் களிக்கும்
கன்றின் கதறலொலி கேட்டதுமே
கறவையினம் மடிநிரப்பி ஓடிவரும் - புல்லுக்
கடகத்தை சுமந்தபடி அப்பாவும்
கள்ளுப்போத்தலுடன்தான்வருவார் களைப்பாற
வயல் வெளியில் நெல்லினங்கள் சிறகடிக்கும்
மடல் விரித்த மலரினத்தில் தேன்குடித்த வண்டுகளும்
மது மயக்கத்தில் எமைத்தீண்ட பறந்து வரும்
கோழியொடு சிறகில்லாக்குஞ்சுகளும் இரைதேடும்.
அதைப் பிடிக்க வானத்தில் பருந்துகளும் வட்டமிடும்.
முற்றத்து பந்தலில் 'ஆடும் முல்லை மணம் வீசும்.
பக்கத்து வீட்டில் பணியாரஞ் சுடும் மணம் கமழும்.
விடியலைத் தெரிவிக்க அம்மன் கோவில் மணிஒலிக்கும்
வெள்ளை வேட்டி நெசனல்சேட்டுடனே அப்பா புறப்பட்டு
கடை திறக்கும் காட்சி தினம் கண்ணில் வரும்.
பள்ளிக்கு நேரமாச்சு என்ற அம்மாவின் குரல்கேட்கும்
பள்ளியில் வாத்தியார் அடி எனக்கு நினைவுவரும்.
உழுக்கென்று சொல்லி வளைந்து வரும் மாமாவை
நழுக்கு நழுக்கென்று காலால் உருவி நடக்கவைத்த
பாட்டியின் பணமில்லா வைத்தியக் காட்சி வரும்.
இத்தனையா?
இன்னும் எத்தனையோ கண்மறவா காட்சிகள்
இத்தனையும் விட்டகன்று அகதியாகி இடர்படவா
வெளி நாடு ஓடி வந்தேன்
வெளிநாடு தேடிவந்தேன்.
எண்ணித்தான் பார்க்கிறேன் என் தாய்மண்காட்சிகளை



படிப்பகம்

www.padippakam.com



# நெஞ்சத்து நெருப்பு

பூமிப் பந்தின் கீழ்ப்பரப்பில்
கடல் சூழ்ந்த நிலப்பரப்பில்
மாங்காய் வடிவத்தில்
ஒரு அழகான தேசம்.
இனவாதத் தீயால் நீண்ட நாளாய்
எரிந்து கொண்டே இருக்கிறது.

தேசம் வாழ் மக்களோ
குருதிச் சேற்றில் குப்புற விழுந்து
மரண ஓலம் ஒலிக்கிறார்கள்
ஆனால் அரசியல் வாதிகளோ அதை
தேசிய கீதமாகக் கேட்டு மகிழ்ந்தபடி
தேசியக்கொடியை ஏலத்தில் விற்று
கட்சிக் கொடிக்கு சாயம் பூசுகின்றார்.
பதவிக்காக முட்டி மோதுகின்றார்.

அரசியல் வங்குரோத்துத்தனத்தால்
பதவியில் ஏற்பட்ட மாயவெறியால்
கொள்கைகளற்ற அரசியல் குண்டர்களால்
கட்டுக்கொள்கை ஆக்கப்பட்ட இனவாதம்
அரசேற்கும் நாடாய் இத்தேசம் மாறி
வெற்றி வேண்டும் என்றால்
வெட்டிக் கொல்லு மனிதர்களை என்று
பிரகடனப்படுத்தப்பட்ட புத்தனின் தேசமாய்.

ஏய் அரசியல் வாதிகளே!
உங்களை நீங்கள் உணர்ந்துகொள்ளுங்கள்
உண்மை அரசியலை தெரிந்து கொள்ளுங்கள்
மீண்டும், மீண்டும்,
துருப்பிடித்த துப்பாக்கியை தூசுதட்டச்செய்யாதீர்கள்
தொலைத்துவிட்ட தோட்டாக்களை தேடவைக்காதீர்கள்.
எடுக்கப்பட்ட கன்னிவெடிகளை மீண்டும் புதைக்கச்செய்யாதீர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



உங்களால் தொலைக்கப்பட்ட புத்தனின் போதனைப்
புத்தகத்தை தேடி எடுங்கள்.
மதத்தால் வெறிகொண்டு அழிவைத் தேடும் அயல் தேசங்களை
புத்திக்கு பாடமாய் எடுங்கள்..!

விக்ரோறியா நந்தவனத்து பூக்களெல்லாம் அழுகின்றனவாம்
தேன் குடிக்கும் வண்டுகளைக் காணவில்லை என்று.
இனவாதவிசம் கலந்த பூக்களென்று வெறுத்துவிட்டனவாம்.
மனிதம் பிறந்தது வாழ்வதற்கு, சாதிப்பதற்கு.. பிற உலகில்
தாயின் மடியில் அமைதியாய் படத்துறங்குது பூனை.
ஆறறிவு மனிதா நீ ஏன் இன்னும் ஐந்துக்குள் நிற்கின்றாய்!
உன் ஆறுக்கு வேலைகொடு
பகுத்தறிவை பயன்படுத்து!
இனவாத அரசியலை எரித்துவிடு
புனிதப் பணியை அரசியலாக்கு
மனிதர்களை, மனிதர்களாய் வாழவிடுங்கள்.
இல்லை என்றால் இல்லை என்றால் இல்லை என்றால்..!





படிப்பகம்

www.padippakam.com



# சீற்றம்..!

எங்கள் சுதந்திர மூச்சுக்கு
மூடி போட்டவன் யார்?
கோவணத்தில் குண்டு விழுந்து
தொலைந்த எங்கள் வாழ்க்கைக்கு
சீரழிந்த என் இனத்தின் வாழ்வுக்கு
திட்டம் போட்டவன் யார்?

எத்தனை காலம்தான் வானத்தைப் பார்ப்பது
எத்தனை காலம்தான் என்பிள்ளைகள்
பாலுக்காய் மருந்துக்காய், ஏங்குவது!?
முடியாது இன்னும் பொறுமையா தோழா
சீறிவிட்டோம் நாங்கள் சீறிவிட்டோம்.

வாருங்கள் தோழர்களே
மகாகவி லாங்ஸ்டன் ஹியூக்ஸ் சொன்னான்
அமெரிக்க நாட்டு கறுப்பின மக்களுக்கு
"என்னின மக்களே"
உங்கள் உடம்பைப் போர்த்திய கறுப்புத் தோல்
உடலை மூடும் தோலாய் மட்டும் இல்லாமல்
உரிமை கேட்கும் போர்க்கொடியாய் மாற்றுங்கள் என்றான்!

எங்கள் தமிழர் தலைவனும் இப்படித்தான் சொல்கிறார்
தமிழர்போராட்டம் அடிமைச் சீட்டின் அடையாளம் அல்ல.
கொடுமையை எரித்த வரலாறு
ஆமாம் இன்று நாங்களும் அப்படித்தான்
எங்களை, எங்கள் உடல்களை
கறுப்பால் மூடி மறைத்து விட்டோம்
உரிமைக்காய் உயிர் கொடுக்கும்
கறுப்பாய் மாற்றிவிட்டோம்
நாங்களே எங்களை மாற்றி விட்டோம்
இனத்துக்காய், இனத்தின்
சுதந்திர விடியலுக்காய்
மாற்றியே விட்டோம்



படிப்பகம்

www.padippakam.com



# எரிக்கப்பட்ட நூலகம்..

விரிந்தபடி நூலொன்று
எதிராளி கரங்களிலே...
எரிந்த அடி நூலொன்று எம்தாய்
கலைவாணி கரங்களிலே.
உயர்ந்தபடி நூல் அகமெல்லாம்
எம் பகையாளி தேசத்தில்..!
எரிந்தபடி நூல் அகமெல்லாம்
எம் தாயகத்து நடு எல்லையிலே.

ஆண்டுகள் பல கடந்திட்ட நிலையிலும் - தமிழர்
இதயத்து நெருப்பாய் எரிந்திடும் தீயிது.
நூலை எரித்து நூல் அகத்தை எரித்தால்
தமிழினமும் தமிழும் அழியலாம் என்று
தப்புக்கணக்கு போட்ட புத்தரின் பக்தனும்
சிங்களக் காடையர் கூட்டமும்
நினைக்க மறந்தது தமிழரின் உள்ளத்து நூலகத்தை
அவர்கள் உள்ளத்து வீர உணர்வுகளை.

மூட்டிய அக்கினி எரித்தது நூலை - ஆனால்
அக்கினி வேள்விகள் எரிமலைகள் தமிழர் இதயத்தில்
தமிழர் உணர்வலைகள் தமிழர் இதயத்து போரலைகள்!

அக்கினித்தீயாய் ஓயாத அலையாய்
சிங்களத்தார் திட்டம் சிதறியது!
அழித்தொழிக்கும் வல்லமை எமக்கும் உண்டு.
சிங்கள தேசமே சிந்தி
சிந்திக்க மறுத்தால் நீயென்றும் மந்தி.



படிப்பகம்

www.padippakam.com



## மண்ணின் நினைப்பு...!

முத்து முத்தாய் பூத்திருக்கா
என் வீட்டு முற்றத்து மாமரம்.
மூன்றுவரி போட்ட அணில் மூன்று
முன்வேலிதனில் இருந்து
மாநாடு நடத்துதாம்
மாம்பழமெப்ப வருமென்று.

கோண்டாவில்தனில் ஒருநாள் - அண்ணன்
கோவில் சென்று வரும்வழியில்
வேண்டி வந்த மாங்கன்று
அப்பாவின் துணையுடனே
ஆழமாய் கிடங்கு வெட்டி
அம்மா ஆசையோடு நட்டமரம்.

அண்ணன் திருமணத்தில்
அண்ணிக்கு வீடில்லை.
அண்ணி குடும்பத்தை
அங்கேயே வாழவிட்டு
சொத்தாக்கி கொடுத்ததினால்
அண்ணனுக்கு சொந்தமது.
நட்டன்று அம்மாவும்
நம்பிக்கையா சொன்னா.

அன்பான என்ராஜா நான்தாண்டா
இந்த மாங்கன்றின் முதல்ப் பழத்தை
சுவைக்க வேண்டுமென்றா.
அந்த அம்மாவும் இன்றில்லை.
நீயும்தான் அருகில்லை
அண்ணன் எழுதி அனுப்பிவிட்ட
அன்புமடல் சொன்ன கதை
அம்மாவை அண்ணாவை மாமரத்தை.

எண்ணித் துடிக்கின்றேன் இதயத்தால்
எப்போதான் என் தாய் மண்ணை மிதிப்பதென்று!!



படிப்பகம்

www.padippakam.com

## சித்திரையாள் வருகின்றாள்
## சிரித்தபடி வரவேற்போம்...!

மாவீரர் இல்ல மனிதர்
மலர்தூவி வணங்கும் தெய்வங்கள்
தாய்மண்ணைக் காக்க,
எதிரிப்படையை எரித்து
தணலாக்கிவிட்ட தெய்வங்கள்
தணலாகிவிட்ட தெய்வங்கள்.

எரிகின்ற தாய்மண்ணின் எல்லை காக்க
அழிகின்ற தமிழ்த்தாயின் மானம் காக்க
புரியாத கொடியோர்க்கு தமிழ் வீரம் புரிய வைத்த
எம்முயிர் மாவீரர் புகழ் பாடுவோம்!

பெண்ணுக்கும் பொன்னுக்கும்
பேதலிக்கும் இளவயதில்
மண்ணுக்காய் உயிர் விதைத்து
மாவீரத்தின் விதையான எம்
மாவீரர் புகழ்பாடுவோம் - எம்
உயிர் வீரர் புகழ் பாடுவோம்.

கையேந்தி வாழ்வதுவும் - எதிரி
கால்பிடித்து ஆள்வதுவும்
பொய்யுரைத்து புகழ்பாடி
புகழ் கொண்டு வாழ்வதுவும்
எம்மினத்திற்கே இழிவென்று - களமாடி
தன்மான உணர்வோடு தணலான
எம் மாவீரர் புகழ் பாடுவோம்.
உயர் மாவீரர் புகழ் பாடுவோம்.



படிப்பகம்

www.padippakam.com



# குடித்தெழு தமிழா உருத்திடு பொடாவை...

கோடி மக்கள் தமிழர்
கூடி வாழும் தமிழகமே
வாடி மனம் நொந்து
வதைப் பயணம்தான்கடந்து
ஆடிவெள்ளம் போல் ஈழவன்
ஓடிவந்தான் உனைத் தேடி.
நீயோ
தேடி உதவி செய்து தேற்றிடமறந்ததேனோ.

பழந்தமிழர் பெருமைக்கு
இது பங்கமடா சிந்தியடா
காக்கை இனம் கூட
தன்னினத் துயர்கண்டால்
காத்திடவே கத்துதடா
சித்திக்கும் மந்திக்கும், சீறும் பொடாவுக்கும்
மகுடிக்காடும் பிராணியாய் நீ
தலை ஆட்டி வாழுகின்றாய்.

உலகப் பெரும் சபையில்
நிச்சயம் ஒரு நாள்
உனக்காக குரல் கொடுக்க
உட்கார்ந்து இருப்பான் ஈழவன்
தமிழர் தனிக் கொடியோடு
உனக்காகவும் உரத்து உலகசபையில்
குரல் கொடுப்பான் என்ற பயத்தில்தானே
மந்தியும் சித்தியும் மயக்கிறார் உங்களை.




படிப்பகம்

www.padippakam.com



தன்மான உணர்வில் தூக்குக்கயிறை
முத்தமிட்ட கட்டப்பொம்மன் பரம்பரையே
விலங்கினம் இல்லையடா தமிழகத்தமிழன்.
விலங்கினை உருக்கும் வீரமறவர்
வீரப் படைபல கண்டவன்
வீர படைபல கொண்டவர் என்று
உரத்து நீ சொல்லடா.
உடைத்து நீ உருக்கடா பொடாவை

உன்கரம் நீட்டியே உதவிட துடித்தெழு
ஈழச் சோதரன் வெற்றிக்கு கரம்கொடு.
உயர் தமிழன் வைக்கோ, நெடுமாறன்
கொள்கையில் கொடிதனைத் தூக்கிடு.





படிப்பகம்

www.padippakam.com



# தலைத்தீபாவளி...

இருளகன்று ஒளிவந்த நாளதனை
இதயத்தில்தான் நிறுத்தி
தீயவன் அழிந்தநாள்
இந்துக்கள் தீபாவளி என்று
ஒளியேற்றி மகிழ்ந்தார்கள் இல்லத்திலன்று
இன்றோ..
ஒளியிழந்து வழியிழந்து
உறங்கிடவும் இடம் இழந்தும்
தறிகெட்டுத் திரிகின்ற தமிழர் நாங்கள்
ஒளியேற்றி மகிழ்ந்திடுதல் எப்போ?

அகதித் தமிழன் என்ற
அடிமைத் தனப் பெயரோடு
அடுத்தவன் தேசத்தில் சிறுபாதி
சொந்த தேசத்தில் பாதிசாமம்வரை
சுதந்திரமாய்த் தூங்காமல் பாதி
பாதையில் சுதந்திரமாய் நடந்திடவே முடியாத
அடிமைத் தமிழனாய் மீதி
சொந்த வீட்டிலும் குந்த முடியாமல்
குந்தி இருக்கிறான் துவக்கோடு நேவி.

இந்த நிலையில் தமிழன்
கோயிலுக்குப் போவானா கோடி உடுப்பானா.
தீபமேற்றி தீபாவளி கொண்டாடி மகிழ்வானா.
தீயவன் அழிந்தால்தான் தீபாவளி

அரக்கன் அதர்மம் அடக்கிட என்று
அன்று வந்தவன் பூவிலே முருகன்.
ஆழ்வோர் அதர்மம் அடக்கிட என்று
வந்தவன் தமிழ்மறவன் தம்பி பிரபா.

அதர்மம் தலைவிரித்தாடும் அந்தகாரத்தில்
ஒளியூட்டும் சுடர்விளக்காய்த் தமிழர் தலைவன்.
தமிழீழத்தில் ஆட்சிக்கு அதிகாரம் எடுப்பானோ
அன்றே தமிழர்க்கு தலைத் தீபாவளி.



படிப்பகம்

www.padippakam.com



# மாவீரர் நினைவு நாள்
# போற்றி அஞ்சலி....

ஈழத்தமிழன் இதையத்து ஒளியானீர்
உணர்வுத்தமிழர் உள்ளத்து விழியானீர்
வையகத் தமிழரின் வாழ்வுக்கு துணையானீர்
தமிழீழ தேசத்து அடித்தள உரமானீர்!

எம்மைக் காப்பதற்கும், எம்மண்ணை மீட்பதற்கும்
எமக்கு உணர்வூட்டி மண்ணில் புதைந்தீரே
மொடனாக வாழ்வதற்கும், முடிச்சாயம் போடுவற்கும்
துடியாக துடிக்கின்ற முட்டுக்காய் இளவயதில்
தாய் மண்ணுக்காய் உயிரைக்கொடையாகி மாவீரரானீரே.
அன்னைத் தமிழ்த்தாயின் பெரும் புகழை அகிலமெல்லாம்
எண்ணிக் கதைக்கின்ற எம்தலைவன் செயல்த் திறனை
எண்ணி மகிழ்ந்திருக்க வைத்து விட்டு
விண்ணுலகம் சென்று விட்டவீராதி வீரர்களே.

உங்களை எண்ணித்துதிக்கின்றோம்
உள்ளத்தில் பதிக்கின்றோம்.
கையில் மலர்கொண்டு கல்லறையை நாடுகின்றோம்
கண்ணீர்த் துளியாலே கல்லறையை நனைக்கின்றோம்.
வீரருங்கள் நினைப்பாலே வீழ்ந்தெழுந்தும் நடக்கின்றோம்.

வானத்து ஒலியலையில் வந்துவிழும் கவிவரியில்
மாவீரர் உங்களைத்தான் வாழ்த்துகின்றோம்.
வையகத்தில் தமிழ்வாழ, தமிழ்வீரம் உயிர்வாழ
விதையான மாவீரர் உங்கள் நினைப்பாலே எங்கள்
குருதிக்குள்ளாயோடும் வெப்பக்குருதியிது சத்தியமே.

மனிதரல்ல மாவீரர் சத்தியமாய்த் தெய்வங்கள்
உமைநினைக்காத் தமிழர் உண்மையிலே தமிழர் இல்லை.
படியேறி கால் நடந்து பழனிமலை செல்வோரே
கால் நடந்து கல்லறைக்கு பொல்லோடும் சென்றிடுங்கள்



படிப்பகம்

www.padippakam.com



# வீரத்தாய்...

குண்டடியில் வீதி அயல்
குறுணிகளாய்த்தான் வீழ
நாற்புறமும் குருதி வெள்ளம்
நனைந்தோடி நாய் குடிக்க

நெஞ்சு விலா எலும்பொன்று
தஞ்சமென்று வேலி தொங்க
அஞ்சாத கையிரண்டும்
அயல் வீட்டுக் கூரை தொங்க

எஞ்சிய மீதிப் பாகமெல்லாம்
எடுத்தொன்றாய்க் குவித்துவிட்டு
தேடுகிறார் இன்னுமொன்றை பொலிசார்
தேடியெடுக்கின்றார் தமிழ் மறவன்
தலையொன்றை - கரும்புலியாய் பேர்சூட்டி!

தலையோடு முகம் கண்ட
பெற்ற தாயவளோ குழறி வந்து
முலையிடித்து பால்குடித்த
வாயெங்கே பல்லில்லா முரசெங்கே
கதறியவள் மயங்கி விழுந்தபடி
தன் மகனை நெஞ்சுக்குள் நினைக்கின்றாள்.

என்னையிழந்து தவமாய் உனை வாங்கி
என்னென்ன நினைவெல்லாம் நெஞ்சில்
நான் நினைத்துக் காத்திருந்தேன்
நெருப்பை நீ மூட்டி தீயிலெரித்துவிட்டாய்.

உனக்காக சாப்பிட்டு உனக்காக முலை பெருத்து
உனக்காக அப்பாவை ஒதுக்கிவிட்டு சில நேரம்
உன் வரவைக் காணாமல் உறங்காமல் விழித்திருந்து
உனக்காக வாழ்ந்த அம்மாவை மறந்தாய் நீ.



படிப்பகம்

www.padippakam.com



எள்ளு எண்ணைக்குள் தோய்த்தெடுத்து
இழுத்திழுத்து மூக்கோடு கால் பிடித்த உன் பாட்டியவள்
உனைக்காணாமல் கதறுவது கேட்க மறந்தாய்
ஆசையுடன் அவள் துள்ளும் தசைகொண்ட
பின்பக்கம் குவியலாய்க் கிடக்குதடா,
போயெரியப் போகுதடா!
பற்றி எரியுதடா பெற்றவள் என் வயிறு.

உன் வெடிச்சத்தம் கேட்கும் வரை
காத்திருப்பான் உன் தலைவன்.
மண்ணின் மைந்தர்களோ மாவீரரென பெயரிடுவர்.
சுமந்து பெற்ற அம்மாவோ நானும்தான் வாழ்த்துகின்றேன்.
உன்னைப் பெற்றதனால் வீரன் என் பிள்ளை
தாய் மண்ணை மீட்பதற்கு தலை கொடுத்த
பிள்ளைதனைச் சுமந்த வீரத்தாய் என்ற
பெருமையுடன் கண்களிலே வழிந்தோடும்
குருதியோடு கரைக்கின்றேன் உன் நினைப்பை!





படிப்பகம்

www.padippakam.com

# தலைஅடி...!

எங்கள் எதிரி தலையில் அடி
எங்கள் புலிகள் தலையில் தங்கமுடி
எங்கள் தலையில் குண்டு போட்டவன்
தங்கும் இடத்திலே குண்டில் பலி
தமிழர் வீரம் தரணி கண்டது

சிங்கக் கோட்டைக்குள் தங்கத் தமிழர்
சீறும் புலிக்கொடி உயரப் பறந்தது.
தேடி அழித்தது சிங்களக் கப்பலை.
நாடிபிடித்து காத்தது புலி பிறதேச கப்பலை
கோடிகள் பல தீயில் எரிந்தது.
உலக மக்கள் தமிழர் வீரம் அறிந்தனர்.

வெண்புறா அம்மா விம்மி அழுதாவாம்.
விக்கிய மாமா குப்புற விழுந்தாராம்.
மத்திய வங்கியும் வந்துதான் பார்த்ததாம்.
சத்திய சோதனை என்றது சென்றதாம்.
புத்தியும் வந்தது அண்ணன் றணிலார்க்கு
சத்தியம் செய்திட தாண்டிக்குளப்பக்கம் சென்றாராம்.

ஆயிரம் தடைச்சட்டம் ஆட்சியார் வைத்தாலும்
அத்தனையும் எங்கள் தம்பிக்கு தூசாகும்..
எரிகின்ற நெருப்புக்குள் உள்நின்று விளையாடும்
தணலாக எம்படை ஆட்சி அதிகாரம் நொருக்கிடும்.
உலக மக்களும் புரிந்து கொண்டார்
உள்ளிட்ட ஆட்சியும் தெரிந்து கொண்டார்.



படிப்பகம்

www.padippakam.com



# சித்திரைப் புத்தாண்டு

சித்திரைப் பெண் வருகின்றாள்
சுபானுவருட பெயர் பூண்டு..
முகம், சிரித்தபடி வருகின்றாள்
தமிழரை சிரிக்கவைக்க வருகின்றாள் வரவேற்போம்.
குண்டு மழை நனைந்து
குருதி நதி பாயவிட்டு
கொள்கையிலே உறுதி கொண்டு
நிமிர்ந்து நிற்கும் தமிழர்களை வாழ்த்த
சித்திரைப் பெண் வருகின்றாள் - முகம்
சிரித்தபடி வருகின்றாள் வரவேற்போம்.
சிங்கக்கொடி ஏற்றி மகிழ்ந்த மாமா
சிங்களத்தார் சிறை கிடக்க
எங்கள் தமிழுக்காய் உயிர்கொடுத்த
எம் தமிழ் மறவர்படை மாலையுடன்
யாழ் வந்த செய்தி கண்டு
சிரித்தபடி வரவேற்போம்!
உலகத்து தலைவர் வரிசையிலே - எங்கள்
உயர் தலைவன் தம்பிநிற்க
உலகத்து ஊடகங்கள் வன்னியிலே கூடிநிற்க!
பெயர் சொன்னால் சுட்டபடை கூடிநின்று
கைகொடுத்து வரவேற்கும் காட்சி காண
சித்திரையாள் வருகின்றாள்
சிரித்தபடி வரவேற்போம்.
உடை கண்டால் தேடல் செய்து உபத்திரவம் செய்த படை
உயர்தலைவன் கட்டவுட்டை தலைசாய்த்து தான்பார்த்து
உள்ளம் கொதிப்பதை உடன் நின்று பார்ப்பதற்கும்
உயர் நாடாம் நோர்வேயின் உயர் பங்கை வாழ்த்திடவும்
உளமார புரிந்துணர்வு உடன்படிக்கை போற்றிடவும்
சித்திரையாள் வருகின்றாள்
சிரித்தபடி வரவேற்போம்.



படிப்பகம்

www.padippakam.com



# மாவீரர் நாள் அஞ்சலி நினைவு...

வீரம் என்ற திலகமதை - தமிழ்
அன்னைக்கு மகுடமாக்கி
உறங்குகின்றீர் குழிக்குள்ளே!
துயரத்தில் தமிழினத்தை வாழவைத்து!

மலர் மாலை கையேந்தி
மனத்தினிலே உமையேந்தி
வலம்வாறோம் விதை குழிநோக்கி
வாழ்த்ததை உங்களுடன் பகிர்ந்திடவே.

உயிர்வாழும் எம் உடலில் ஓடும்
குருதியிலே கலந்திட்டீர்.
இதயத் துடிப்பினிலே நீவிர்
சுவாச உறவாய்த்தான் கலந்திட்டீர்.

தலை குனிந்த தமிழினத்தை
தலை நிமிர செய்திட்டீர்
உலகப் பெரும் தலைவர்களே
உமைத் தேடிவர வைத்திட்டீர்.

உலகப் பெரும் தலைவர்
எம் தலைவர் உடன்பேச
உணரும் நிலை வந்தாச்சு.
நம் பெருமை உலக உச்சிக்கே சென்றாச்சு!

எதிரி படைக்கலன்கள் பறித்திட்ட உங்களது
முல்லைப் படை வீரம் ஆலின் விழுதாச்சு
பறித்த படைக்கலனின் பலமே எம் தலைவர்
மண்மீட்புப் போருக்கு ஓயாத அலையாச்சு.

உங்களைப்போற்றி தமிழால் கவிபாடி
எங்களது நெஞ்சத்து உறுதிக்கு மருந்தாக்கி
எடுக்கின்றோம் உறுதி தமிழீழம் உங்கள்
வீரம் கொள் தியாகத்தை உயரப் பறக்கவிட்டு
தலைசரித்து வாழ்த்தி வணங்கிடுவோம் அஞ்சலித்து.



படிப்பகம்

www.padippakam.com



# வாழ்த்து

வல்வைப் பெருங்கடல் வந்தடிக்கும் வடகரையில்
வல்லிபுர மறவன் வளர்த்தெடுத்த தமிழ் உணர்வு
வீரத் தமிழ்மறவர் வேங்கையெனப் போற்றும்
ஈழத்தமிழ்த் தலைவர் தம்பியே.
நீடூழி நீடூழி நீர் வாழ்க!

தமிழ் வீரம் கொண்ட மறவர் பலரென்று
பழைய பஞ்சாங்க பாடத்தில் படித்ததுண்டு
தமிழர் கண்கண்ட தமிழ்மறவன் ஈழத்தலைவன் தம்பியென்று
கவிஞர்களே எழுதுங்கள் கவிபாடி வாழ்த்துங்கள்.

தமிழனை வீரத்தில் குளிக்கவைத்த தலைவா
தமிழரையே கரும்புலியாய் மாற்றிவைத்த தலைவா
அடுப்படியில் இருந்தவரை ஆயுதமாய் மாற்றி
அடுத்தடுத்து வெற்றிகளை பறித்தெடுத்த தலைவா
நீவாழ்க நின் புகழ் வாழ்க.
நிமிர்ந்து தமிழ் வாழ்க!

தமிழனை பயங்கரவாதியென பழியிட்ட சிங்களத்தார்
பட்டாடை விரித்து வரவேற்கக் கண்டாய்.
உன்பெருமை சொல்லி உலகத் தமிழினமே வாழும்
உன் படைவீரம் கண்டு உலகமே போற்றுது.
தமிழ் அன்னை விலங்குடைத்த மறத் தமிழா
தமிழ்த்தாயின் தலை மகனே
நீடூழி நீடூழி!நீ வாழ்க.
கலிங்கத்து மன்னன் கல் சுமக்க வைத்தான்
ஈழத்து மன்னன் புரிந்துணர்வை சுமக்க வைத்தான்
புரிந்துணர்வை புரியாதார் சுமப்பது நிச்சயம்
தமிழீழ தேசம் மறுகணம் மலர்வது நிச்சயம்
தமிழ் வீரம்,தமிழீழம்,தமிழீழ தேசம்.
நீடூழி நீடூழி வாழ்க.
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com



# சங்காரக் கோலங்கள்....

வீட்டு முற்றத்தில் கோலமிட்டால்
வீட்டுக்குத்தான் அழகு.
நாட்டு முற்றத்தில் கோலமிட்டால்
நாட்டுக்குத்தான் அழகு.

கோலமும் மனிதரும் ஒன்று
கோலமழிந்திட மனிதர்க்கும் பங்குண்டு.
மனிதரும் மாவும் கோலத்தில் பங்கு
இருவர் சேர்ந்துதான் உருவத்தில் பங்கு.

ஒரு புள்ளியின் ஆரம்பம் கோலம்
ஒருதுளி விந்தின் ஆரம்பம் மனிதன்.
கோலத்தில் நீர்பட்டால் கோலம் அழிந்திடும் - மனித
கொள்கையில் தீபட்டால் மனிதம் அழிந்திடும்.

தாய் மண்ணில் இன்று சமாதானக் கோலம் - கையில்
மாவோடு மனிதரும் வாசலில் நிற்கிறார்.
தாயம்மா தருவாவா நம்பிக்கைக்கோலம்
தெரிஞ்சாச்சு சந்திரிகாவின் நரிவால்க்கோலம்.

ஆயிரம் கோலங்கள் தமிழரை அணுகுது
அனைத்தும் மாரிகால கோலமாய்ப் போகுது - ஆழ்வோர்
அதிகம் புள்ளிகள் பொய்யில் வைப்பதால்
அலங்கோலக் கோலமாய் அவையெல்லாம் மாறுது.

குருதியில் கோலங்கள் போட்ட எம் உறவுகள் - நம்பிக்கைக்
குருத்து மாக்கோலம் மண்ணிலே போடுது - அதை
அழித்திட நினைத்து இனவாதம் வானத்தை மூடுது.
இனியும் மண்ணிலே குருதிக் கோலம் போடவா?

நீதி தேவதை கண்ணை மூடித்தான் நிற்கிறாள் - உயர்
நீதிபதியாய் இறைவன் கண் மூடவே மறுக்கிறான்.
அறிவில் சிறந்த மனிதங்கள் அரிசிமாவில் கோலங்கள்
உறுதி உண்மை கொண்ட எங்கள் தலைவன் கையிலே
கண்ணன் கை சக்கரம் ! போடுவார் கோலம்!! சங்காரக் கோலம்!!!



படிப்பகம்

# வேதனை வருமென்றே விலகி நீ ஓடாதே!

வேதனை வருமென்றே விலகி நீ ஓடாதே - தம்பி
சாதனை செய்யடா புது சரித்திரம் ஆக்கடா.
சிந்தனை மருந்தடா நீ செயற்படு துணிந்தடா.
மரணம் ஒருமுறை வருமதை வீரனாய் ஏரடா.
வேதனை வருமென்று அம்மா விலகி ஓடியிருந்தால்
நீயேது நானேது நம் அப்பாவின் பெயரேது.
வேதனை வருமென்று விலகி நீ ஓடாதே - நம்பி
சாதனை செய்யடா புது சரித்திரம் படையடா.

வேதனை பட்டதால்தானடா தங்கம் -
சபைக்கு வந்தது தாய்க்குலம் மதித்திடும் தாலியாய்.
வேதனை பட்டதால்தானடா காட்டு மூங்கில்
காக்கும் கடவுள் கண்ணன் கைக் குழலாய் வந்தது.
வேதனை பட்டதால்தானடா மலையாயிருந்த கருங்கல்லு
மானிடம் கைகூப்பி வணங்கிடும் கடவுளாய் வந்தது.
வேதனை கண்டு விலகி நீ ஓடாதே - நம்பி
சாதனை ஆக்கடா, புது சரித்திரம் படையடா.

உரலில் நெல்லு பெரும் வேதனைப் பட்டதால்
உணவுக்கு நல்ல உரமான அரிசியாய் வந்தது
பிரசவ அறையில் அம்மா பெரும் வேதனைப் பட்டதால்
வெளி நாட்டில் நீயும் பிள்ளையாய் வாழ்கின்றாய்
பிள்ளை நீ கரண்டடுப்பில் வேதனைப் படுவதால்தானடா
பெற்றவர் வயிறு தாய்மண்ணில் வாடாது நிறையுது
வேதனை என்பது மானிட வாழ்வின் படிக்கட்டு அதை
சாதனை ஆக்குவதே வாழ்வில் மாமனிதன் செயலாகும்.
வேதனை வருமென்று விலகி நீ ஓடாதே - நம்பி
சாதனை ஆக்கடா புது சரித்திரம் படையடா.

www.padippakam.com



அடர்ந்து விரிந்த அந்த வீர வன்னி
காடாய்க் கிடந்த அந்த உயர்வீர வன்னி
கொடும் சர்வதிகாரி சந்திரிகா செயலுக்கு
சவாலாய் நிற்குது பார்.
அந்த பச்சைநிற வயலோடு
அந்த வீரம் நிறைந்த் வன்னி மக்கள்
வேதனை வருமென்று ஓடி ஒளிந்திருந்தால்
பச்சைக்கொடி காட்டுமா வன்னி ஓடி வந்தோர்க்கு.
வன்னி மக்கள் துயர் போக்கி பட்டினியை தீர்க்குமா
வேதனை வருமென்று விலகி நீ ஓடாதே - நம்பி
சாதனை ஆக்கடா புது சரித்திரம் படையடா.

வயல் உழ வண்டிக்குத் தடை.
வண்டிக்கு டீசல் வரவும் தடை.
பயிருக்கு உரமும் வரத் தடை.
பூச்சிக்கு மருந்து வரவும் தடை.
சோதனை வருமென்று வன்னிமக்கள் ஓடி ஒளிந்திருந்தால்
சாதனை செய்வாரா உயிர்வாழ.
நனைந்த விறகில் காஸ் எடுத்து வண்டி ஓட்டி
இயற்கை உரத்தில் பயிர் வளர்த்து
சாதனை படைக்கிறார் பாரடா ஈழம்வாழ் தமிழர்
வேதனை வருமென்று விலகி நீ ஓடாதே நம்பி
சாதனை செய்யடா புது சரித்திரம் படையடா.

கூடி இருந்த சிலர் பெரும் குழியைப் பறித்து
சதிசெய்து ஊத்தினார் வெண்ணீரை இலக்கிய பூவரசு வளர
வேதனை வருமென்று தம்பி மகேசன் துணியாதிருந்திருந்தால்
சாதனையாய் படைக்குமா பூவரசு.
பதினோராம் ஆண்டுமலர்
சிந்தனை மருந்தடா நீ செயல்படு துணிந்தடா.
சாதனை செய்வதே மா மனிதன் செயலடா.
வேதனை வருமென்று விலகி நீ ஓடாதே
சாதனை ஆக்கடா புது சரித்திரம் படையடா.



படிப்பகம்

www.padippakam.com



இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தது போலிப்பெயரில்
இந்திரா புத்திரன் கிழட்டுநரி கூட்டுச்சதி - என்று
எம்தலைவன் தெரிந்தும் புதிய திட்டமே தீட்டினார்.
வேதனை வருமென்று விலகி ஓடியிருந்தால் இன்று
உலக அரங்கில் தமிழீழம் சாதனை படைக்குமா - இல்லை
கப்பலில் ஓடியேறி இந்தியப்படை தன்கரையைச் சேருமா.
உலக அரங்கில் தமிழ் மறவர்பெருமை ஓங்கியொலிக்குமா
வேதனை கண்டு விலகி நீ ஓடாதே - நம்பி
சாதனை ஆக்கடா புது சரித்திரம் படையடா.
சிங்களக் கோட்டைக்குள் சீறும் வேங்கையாய்த்
சீற்றம் கொண்டானே அம்மணி ஆட்சிக்கு எதிராக.
உலகத்தார் சபையில் உரக்கச் சொன்னானே
சிங்களக் கொடுமையை
தன்மான உணர்வில் தன்னினப்போரை
உணர்வோடு உயர்வு செய்தானே!
வேதனை, சோதனை வருமென்று தெரியாமலா சொன்னான்.
வேதனை வருமென்று விலகி ஓடியிருந்தால் தமிழ் மக்கள்
மனதிலின்று மா மனிதனாய் நிறைவானா சிந்தி.
துணிவே துணையென்று தொடரடா உன் பணியை
வேதனை வருமென்று விலகி நீ ஓடாதே - நம்பி
சாதனை ஆக்கடா புது சரித்திரம் படையடா.
அன்று
உருஸ்சியா மண்ணில் நின்று
உன்மனம் சோதனைப் பட்ட போது.
ஏஜென்சி செயலைக் கண்டு
நீயும்ஏங்கித்தான் நின்ற போது
வேதனை வரும் என்று
விலகித் தான் ஓடி இருந்தால்
ஜேர்மனிதான் வந்து இருப்பாயா
உன்தங்கைக்குதிருமணம் நடத்தி,
அம்மா, அப்பாவை கொழும்பில் இருத்துவாயா
வேதனை வருமென்றே விலகி நீ ஓடாதே - நம்பி
சாதனை ஆக்கடா புது சரித்திரம் படையடா.



படிப்பகம்

www.padippakam.com



# கொண்டாட்டம் ஒரு திண்டாட்டம்

ஊர் பிளவுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்
கூத்தாடி பிளவுபட்டால் ரசிகனுக்கு கொண்டாட்டம்
நோயாளி பிளவுபட்டால் வைத்தியர்க்கு கொண்டாட்டம்
வைத்தியர் பிளவுபட்டால் நோயாளிக்கு திண்டாட்டம்
நண்பர்கள் பிளவுபட்டால் எதிரிக்கு கொண்டாட்டம்
எதிரிகள் பிளவுபட்டால் சமூகத்துக்கு திண்டாட்டம்
கோவில்கள் பிளவுபட்டால் பக்தர்க்கு கொண்டாட்டம்
பக்தர்கள் பிளவுபட்டால் பூசாரிக்கு திண்டாட்டம்
பத்திரிகை பிளவுபட்டால் வாசகர்க்கு கொண்டாட்டம்
வாசகர்கள் பிளவுபட்டால் பத்திரிகைக்கு திண்டாட்டம்
வர்த்தகர்கள் பிளவுபட்டால் வாடிக்கைக்காறருக்கு கொண்டாட்டம்
வாடிக்கைக்காறர் பிளவுபட்டால் வியாபாரிக்கு திண்டாட்டம்
வானொலிகள் பிளவுபட்டால் நேயர்க்கு கொண்டாட்டம்
நேயர்கள் பிளவுபட்டால் வானொலிக்குத் திண்டாட்டம்
சங்கத்தார் பிளவுபட்டால் சமூகத்துக்கு திண்டாட்டம்
சமூகம் பிளவுபட்டால் ஊருக்கே திண்டாட்டம்
ஆட்சி பிளவுபட்டால் எதிரிக்குக் கொண்டாட்டம்
ஆள்வோர் பிளவுபட்டால் மக்களுக்குத் திண்டாட்டம்
திண்டாட்டம் திண்டாட்டம் தீர்வு இல்லாதோர் திண்டாட்டம்
கொண்டாட்டம் கொண்டாட்டம் விரும்பாதார் கொண்டாட்டம்
பிளவுபட வைத்துவிட்டால் சிலரின் சாதனைசெய் கொண்டாட்டம்
ஈழத்தமிழினம் தான்இருக்கும்வரை இருக்கும் இந்த திண்டாட்டம்
இதனால்தான் தமிழர்க்கு இன்னுமில்லை நிம்மதியாய்க் கொண்டாட்டம்.



படிப்பகம்

www.padippakam.com



# முடிந்த முடிவாச்சு..

அகிலத்து மொழிகளுக்கு மூத்தவளே
அணையாத ஒளி விளக்காய் திகழ்பவளே!
முத்தமிழாய் ஒளிகொடுக்கும் தாயவளே - நீ
கலைகள் பல பெற்றெடுத்த தாயம்மா -

பெரும் புகழைத்தான் சுமந்து முடிகொண்டாய் நீயம்மா
உன் பிள்ளை தமக்கிடையே உருவான துயராலே
மூவேந்தர் பரம்பரையும் முடியழிந்து போனதம்மா.
சீரழிக்கும் சிங்களத்தால் சிகைகுலைந்த துரோபதையின் கதையம்மா.

இந்த சிகை முடிப்பதற்கே ஏழப்போர் நடக்குதம்மா - நீ
இழந்து விட்ட அரியணையை எடுப்பதற்கே போரம்மா.
தம்பி தலைமையிது தப்பாமல் வெற்றி கொள்ளும் - தாயே
சிகை முடிக்கும் காலம் மிக விரைவில் வந்துவிடும்.

காட்டுக்குள் வளர்ந்த புலி நாட்டுக்குள் வந்தாச்சு.
தாய் நாடு கடந்து வெளி நாட்டுக்கும் வந்தாச்சு.
உள்நாட்டுப் பிரச்சனையாய் உறை கொண்ட இனவாதம்
உலகத்தார் சபைகாண உயிர் பெற்று வந்தாச்சு.

எங்கள் முடிவதனை எழுத்தில் கொடுத்தாச்சு.
எங்கள் துணையின்றி நாடே இல்லையென்ற நிலையாச்சு!
உலகத்தார் உணர்ந்திட்ட திட்டம் எடுத்தாச்சு - தமிழர்
உயிருக்கு விலையான உரிமை வரவில்லை என்றால்
ஓயாத அலை நாளை எடுத்தாடும் நிலைவந்தால் தமிழர்
உயிர்ஈழம், உயர்ஈழம் என்று முடிந்த முடிவாச்சு.



படிப்பகம்

www.padippakam.com



# ஞானதீபமே திலீபா
# நீ நிம்மதியாய்த் தூங்கு....

எண்ணிரண்டு ஆண்டுகளை
ஏக்கத்தில் தொலைத்து விட்டோம்.
என்றும் உன் நினைவதனை
எம் இதயத்தில் விதைத்துவிட்டோம்

பொன்னுக்கும் பெண்ணுக்கும்
பேதலிக்கும் இளவயதில் - நாய்
மண்ணுக்காய் உயிர் கொடுத்து - விடுதலை
விதையான ஞானதீபமே
திலீபா! நிம்மதியாய் நீ தூங்கு.

கோடாலி, கத்தி, கைக்குண்டு, துவக்கு
தொடர்கண்ணி வெடி, தானிருக்கு
உயிரை ஒரு ஆயுதமாய் உலகுக்குத் தெரியவைக்க
உண்ணாமல் இருந்து - உன்
தாய் மண்ணுக்காய் விதையாகி
தமிழ் வீரம் உணரவைத்த
மறத்தமிழன் தியாகி நீ.
உனை மறப்பாரா எம் மறத்தமிழர்
தமிழைக்காக்க! தமிழ் மண் வீரம்காக்க!
தானைத்தமிழர் செய்வது ஏதென
ஏங்கிநின்ற எம் உறவுகள் புரிந்திட
நல்லை வீதியில் சாகும் நாளை
நன்றாய்த் தெரிந்தும் சிரித்தபடியே - நீ
தாய்மண்ணுக்கு உடலையும் தமிழுக்குயிரையும்
ஈவதொன்றே உன்பெரும் கடனென
மனதுடன் ஈய்ந்து தமிழர் வீரம்காத்த
தியாகத் திருவுரு நீ.

சிதறுண்டு சாகும் சிங்கார தமிழ்க் குடியை - உன்
சிரம் தந்து காக்கத் தோழர் சிரித்தபடி நிற்கின்றார்
தீர்க்கமாய்த் தமிழீழம்.
தியாகத்தின் ஒளிவிளக்காய் திலீபன்
திருவுருவம் உயர்ந்து நிற்கும்.
தடை உடைக்கும்
அலைகடலும், கொடும்புயலும், அஞ்சும் எரிமலையும்
குலைநடுங்கும் பூகம்பம்! சிங்களத்தார் தோளும் இனி நெருங்கா
கொண்டார் தமிழ் உறுதி குலையாது உன் மேல் ஆணை.
வென்றிட்டோம் தமிழ் ஈழம் மறவனே
நிம்மதியாய் நீ தூங்கு.
நிம்மதியாய் நீ தூங்கு!!



படிப்பகம்

www.padippakam.com



# புத்தாண்டே வந்துவிடு புரிந்துணர்வை வளர்த்துவிடு!.....

குண்டுமழைதான் குறைந்து
குளறல்ஒலிதான் குறைந்து
நிம்மதியாய் மக்கள் உறங்குகின்ற வேளை
வந்திடுமோ மீண்டுமென ஏங்குகிறார் மக்கள்.
புத்தாண்டே நீயும் சிரித்தபடி வந்துவிடு.
புரிந்துணர்வை வளர்த்தெடுத்து நிம்மதியைத் தந்துவிடு.

வீழ்வது நாமாக இருந்தாலும் அஞ்சோம்
வாழ்வது தமிழாக இருந்திட்டால் மகிழ்வோம் என்று
குண்டு மழையிலும் கோவணத்தோடு மரத்தடி
குந்தி இருந்தவர் நாங்கள்.
உள்ளத்தில் உணர்வென்ற பயிரை வளர்த்து - குருதி
வெள்ளத்தில் முளைகொண்ட மறவர் நாங்கள்.
புரிந்துணர்வை நாடி புறப்பட்டு விட்டோம்.
நீயும் புரிந்தெம்மை நாடி வளர்த்தெடுக்க வந்துவிடு.

இருட்டில் தொலைத்த வானத்தைத் தேடியே
பட்டமரமான தமிழர் இதயத்து நினைப்பு.
படரும் நினைப்போடு துளிர்விடும் காலம்.
தட்டிக்கொடுத்து நீ உதவுவாய் என்றெண்ணி.
உலகோடு உன்னையும் வரவேற்று நிற்கின்றோம்.
புத்தாண்டே நீயும் சிரித்தபடி வந்துவிடு.
புரிந்துணர்வை வளர்த்தெடுத்து நிம்மதியை தொடரவிடு.

மாடிகளாய் நிமிர்ந்து நின்ற எம்தேசம்
எதிரிகளால் மண்மேடாய்த்தான்கிடக்கு
வந்துபார் நீயும்.
வான் பார்க்கும் பயிராக வாடி நிற்கும் மக்கள்
வருமென்ற நினைப்பில்தான் காத்திருக்கார் இன்னும்.
வேட்டை நாய் விளையாட்டை
எதிரி காட்டிடவே நினைத்தால்
வேங்கைகள் நிலை மாறும்
விளையாட்டு வினையாகும்.

புத்தாண்டே வந்துவிடு சிரித்தபடி.
புரிந்துணர்வை வளர்த்தெடுத்து நிம்மதியை தந்துவிடு.



படிப்பகம்

www.padippakam.com



உலகத்தைக் கட்டியாண்ட டாலர் வீட்சிப் படியில்
திடீர் பிரசவ ஈரோ, வளர்ச்சிப் படியில்.
அமெரிக்காவில் பணவீக்கம் சமப்படுத்த
புஸ்சின் புதிய கண்டு பிடிப்பு எண்ணைக் கிணறு
உலக மக்களின் பேரால் ஈராக்கில் குண்டுமழை

பாடசாலை கட்டி திறப்புவிழா நடந்தது.
மந்திரி வந்து நாடா வெட்டிப் போனது
மனதை விட்டு அகலவில்லை இன்னும் - ஆனால்
பாடசாலைச் சுவரெல்லாம் பெரிய பெரிய வெடிப்புகள்
புது வீதி திறக்கப்பட்டது.
மதிலில் ஒட்டிய விளம்பரம் கிழியவில்லை.
இன்னும் கண்ணைப் பறிக்குது.
ஆனால்..!
வீதி பூரா நடக்க முடியாது குண்டும் குழியும்

புதிதாய் ஆஸ்பத்திரி திறக்கப்பட்டது.
வண்ணம் வண்ணமாய் விளம்பரப் பலகைகள்.
நோயாளர் எல்லாம் வரிசையில் மகிழ்வோடு - ஆனால்
மருந்துகள் இன்னும் வந்து சேரவில்லையாம்
வெளிக்கடையில் மருந்து வேண்ட டாக்டர் புத்திமதி.

நிதான விலைக்கடை மக்களுக்காக திறக்கப்பட்ட
ஆண்டுகள் பல கடந்து விட்டன
ஆனால்....
இன்னும் நிதான விலைக்கு பொருட்கள் வரவில்லையாம்!
பக்கத்து பல்பொருள் அங்காடியில் குவியலாம்.

மந்திரி மகன் எடுத்த பரிட்சைகள் அனைத்துமே
தகுதி காணப்படவில்லை - ஆனால்
சட்டக்கல்லூரியில் அனுமதி கிடைத்து விட்டது.
சித்தியடைந்த விவசாயி மகனுக்கு சீற்றில்லையாம்



படிப்பகம்

www.padippakam.com



# கடவுளுக்கு மனு!!

சண்டையை அம்மா நடத்தியது வெற்றிக்காகவா. இல்லை
பழைய ஆயுதங்களை வாங்கிக் கடலில் கொட்டிவிட்டு
ஆயுதக் கொள்வனவுக் கணக்கில் கமிசனை
வங்கிக் கணக்கில் வலன்சைக் கூட்டவே.

நாட்டின் தேசியக் கொடியை எரித்து
அதன் வெப்பத்தில்
புதுச்சாயம் பூசிய கட்சிக்கொடியை காயவைக்கின்றார்
சிங்கள இனவாத அரசியல் கட்சிகள்.

இந்தச் சண்டாள மக்கள் சேவையாளரை
தட்டிக்கேட்க எவரும் இல்லையே
அதனால்.
கடவுளே உனக்குமனு..!
ஏனென்றால்

இவர்கள் தானே அவர்கள்.
அவர்கள் தானே இவர்கள்.
அவர்கள் தானே இவர்கள்.
இவர்கள் தானே அவர்கள் .





படிப்பகம்

www.padippakam.com



# என்னடி அபிராமி சொல்லடி ஒரு பதில்..

என்னடி அபிராமி நீயும்
சொல்லடி ஒரு பதில்.
நின்மதி எங்கடி - தமிழனின்
நீள்துயர் ஏனடி.
எரிவதுன் மண்ணடி
ஏனடி மௌனம் நீ.
என்னடி அபிராமி நீயும்
சொல்லடி ஒரு பதில்
கட்டிய வீட்டடி
கொடியவள் குண்டடி
மாரி மழையடி - உன்
மக்கள் மரத்தடி.
வேட்டை நாய்போல
விரட்டும் நோயடி.
நோனா ஆட்சியில்
மருந்துத் தடையடி
என்னடி அபிராமி
சொல்லடி ஒரு பதில்.

பசிக்கு உணவின்றி - வன்னியில்
பட்டினிச் சாவடி.
பாவிகள் ஆட்சியில்
பாலகர் பாலுக்கும் தடையடி
பற்றி எரியுதே பெற்றவள் வயிறடி.
என்னடி அபிராமி நீயும்
சொல்லடி ஒரு பதில்.



படிப்பகம்

நீதிதேவியின் கையில் விலங்கடி
நீதிசொல்லுவோர் வாய்க்கு பூட்டடி!
பூட்டிய சிறைக்குள்ளே
கையில் விலங்கொடு தமிழன்பிணமடி.
அதர்மம் ஆட்சிதான் எம்மண்ணில் நடக்கடி
அதர்மம் கண்டதும் நீ காளி உருவடி
அன்னை நீயடி அதர்மம் அழியடி
பிள்ளைத்துயரடி பொறுமை ஏனடி
என்னடி அபிராமி சொல்லடி ஒரு பதில்.

சுந்தரி ஆட்சியில் சுதந்திர பொன்விழாவடி - தமிழனின்
சுதந்திர உணர்வுதான் சுடுகலன் முன்னடி.
தர்மத்தாயடி தரணிக்கு நீயடி
தர்மம் காத்திட தயக்கம் ஏனடி.
எண்ணிப்பார்த்திடும் இடமும் வேறடி.
பிள்ளைகள் துயரடி பெற்றவள் நீயடி
துள்ளி எழுந்தடி துயரைப் போக்கடி.
வாளின் கையொடு வழியைக் காட்டடி
பாலர் எமக்கொரு பதிலைச் சொல்லடி.
என்னடி அபிராமி சொல்லடி ஒரு பதில்.



www.padippakam.com



# பிரேயரின் ஒப்பாரி.....

அண்ணே! அண்ணே! புஸ் அண்ணே!
அடைபட்ட படைக்கு வழி என்னண்ணே!?
ஐயோ அண்ணே நம் படையை
வளைச்சுப்போட்டுது சதாம் படையண்ணே.
அண்ணே அண்ணே புஸ் அண்ணே!
அடைபட்ட படைக்கு வழி என்னண்ணே!?

நாமள் நினைச்சது தவறண்ணே - இங்கே
நாட்டு நிலைமை வேறண்ணே.
நாலு நாளில் நாட்டைப் பிடிப்பதாய்
நாங்கள் சொன்னது பிழையண்ணே
அண்ணே அண்ணே புஸ் அண்ணே!
அடைபட்ட படைக்கு வழி என்னண்ணே!?

மக்கள் பசியில் துடிப்பதாய் நாங்கள்
சொன்னது முழுசாப் பொய்யண்ணே
மக்கள் பசியில் சாவதெல்லாம்
நாங்கள் வந்த பின்னண்ணே
குண்டு மழையில் நனைத்தாலும் - எதிரி
குனிய மாட்டான் போலிருக்கு.
உலகைக் கூட்டி அடித்தாலும் சதாமை
பதவி இறக்க முடியாது.
அண்ணே! அண்ணே! புஸ் அண்ணே!
அடைபட்ட படைக்கு வழி என்னண்ணே
உலகம் பூரா உரக்கச் சொல்லுது
நாம செய்வது தவறென்று.
உலகசபையின் முடிவை எதிர்த்து
நாம வந்தது பிழையென்று.
உனக்கும், எனக்கும் தெரியாது.
உள்ளுக்குள்ளும் பகையாச்சு.
மண்ணில் செய்த குதிரையை நம்பி
மாகாவலி ஆற்றைக் கடந்தவன் கதையாச்சு!
ஈராக் சினிமாக்கள் துணை என்றாய்
இவர்கள்தானே பெரும் தடையாச்சு.
போட்ட கணக்கு பிழை அண்ணே!
பிழையைத் திருத்த வழி என்னண்ணே!



படிப்பகம்


www.padippakam.com



அண்ணே! அண்ணே! புஸ் அண்ணே!
அடைபட்ட படைக்கு வழி என்னண்ணே!

பாழ்படுவார், ரஸ்சியன், கொறியாவும்,
ஏவுகணையை ஏவித்தானே வெருட்டுகிறார்
எதிரிநாடாம் ஈரானும் அயலைக் காட்டிக்கொடுக்க மறுக்கிறான்.
சீரழிவான் சிரியாவும் களவா ஆயுத உதவி செய்கின்றான்.
கூடி நின்ற துரிக்கியனும் எட்ட நின்றே ரசிக்கின்றான்.
உன் வலக்கரமாம் சவுதியும் இனத்தைச் சொல்லி வெறுக்கிறான்.
ஒரு குவைத்தை மட்டும் நம்பி குண்டை வீசிப் பயனென்ன!?
உள்ளே மாட்டுப்பட்ட நம்படையை மீட்டெடுக்க வழிசொல்லு.
அண்ணே! அண்ணே! புஸ் அண்ணே
அடைபட்ட படைக்கு வழியென்ன! ?

தற்கொடையும், கரந்தடியும், பலமாய் ஆச்சு எதிரிக்கு.
உள்ளே, போகவிட்டு வளைச்சடிக்கும் போருமாச்சு.
மக்கள் பூரா சதாமுக்கு வலுவைச்சேர்க்கும் குண்டாச்சு.
உலக மக்கள் எல்லோரும் எம்போரை எதிர்க்கும் நிலையாச்சு!
ஏவுகணையை திசைமாற்றும் எதிரி பலமும் கண்டாச்சு!
எனக்கும் உனக்கும் எதிராக உலகமன்றில் வழக்காச்சு!
அண்ணே!அண்ணே!புஸ் அண்ணே!
அடைபட்ட படைக்கு வழியென்ன!?
ஐயோ அண்ணே வழியென்ன!?





படிப்பகம்

# அமுத பொங்கல்...

தமிழர் இடம் எத்தனையோ
பழமொழிகள் உண்டு - அதில்
தைபிறந்தால் வழிபிறக்கும்
என்பதுவும் ஒன்று.
ஊரறிய, உலகறிய நீபிறந்தும் விட்டாய்
உன் இனத்தின் துயர் துடைக்க
ஒரு வழியை பொங்கலே நீ சொல்லு.

ஏர் அறியும் உழவன்கை வேதனைகள் பற்றி
நீயறிவாய் தமிழினத்தின் சோதனைகள் பற்றி,
பாரறியும் போதிமரப் போதனைகள் பற்றி - நேர்வே
பகுத்துணர்ந்து விடைபகர
பொங்கலே நீ வழி சொல்லு.

செந்தமிழர் வீட்டிற்கென்றே
சிறப்புடன் அமைந்த பொங்கல்.
வந்ததும் விளைவு பொங்கும் உறவுகள்
வாழ்விலே மகிழ்வு பொங்கும்.
சந்தணம் போன்ற வெல்லச்சாறில்
இன்பத்தேன் ஆறாய் ஓடும் - அதில்
புதுப்பானை பொங்கல் படையல் கண்டு
புலம் பெயர் தமிழர் நெஞ்சில்
ஆனந்தம் ஆறாய் ஓடும்.
பொங்கலே நீ வருக இனம் வாழ வழியொன்று தந்திடுக!

www.padippakam.com



அன்பெனும் பயிரைத் தூவி
அறிவென்னும் நீரைப்பாய்ச்சி
தமிழ்நெறி வேலிபோட்டு
தமிழ்ப்பணி செய்யும் பொங்கல்
அன்பு நெறியென்னும் நஞ்சைத் தன்னில்
வேற்றுமைக் களையை நீக்கி தமிழர் மடமையை
அறுவடை செய்தல் பொங்கல் -, அதுவே
அறிவுடைத் தமிழர் அமுதப் பொங்கல்.

வந்திடும் மண்ணின் செய்தி
வயிற்றினில் பாலை வார்க்க
முன்னைய நரிக்குணத்தழும்பதனை
முனைப்புடன் எண்ணம் நோக்க
பின்னைய உலகத்தாரின் பிணைப்பதை
எண்ணிப் பார்த்து
வந்திடும் பொங்கலை நாம் வரவேற்போம்
பொங்கல்பொங்கி வேதனைகரையுமென்றே நம்பி.





படிப்பகம்

www.padippakam.com



# கோடை கால விடுமுறையும் தாய் மண் நினைப்பும்......

கோடை விடுமுறை வந்தாச்சு
ஆடை அனைத்தும் குறைந்தாச்சு.
கோவிலிலும் கொடி ஏறியாச்சு
கூறையும் வெளியே வந்தாச்சு!

பனிக், குத்தில் பட்ட வேதனையில்
பளிச்சென்று இருந்த முகமெல்லாம்
வெய்யிலில் காய்ந்து கறுத்தாச்சு
தாய்மண் நினைப்பும் வந்தாச்சு!

புலம்பெயர் மக்கள் நெஞ்சத்தில்
புதைந்து கிடக்கும் நினைப்பாச்சு.
சமாதானப் பேச்சும் வழியாச்சு
நானா றவலும் துணையாச்சு

ஒரே கப்பலில் முன்னூறு
ஒரே நாளில் போயாச்சு.
வங்கிக் கணக்கு எல்லாமே
வந்து கதைக்கும் நினைப்பாச்சு.

இயற்கை அன்னை தோட்டத்தில்
இயல்பாய்ப் பூத்த பூவெல்லாம்
சுயமாய் சுதந்திர பாட்டிசைத்து
நர்த்தனம் ஆடும் கலைகண்டேன்.
சிரித்து மகிழ்ந்து சுகம்கண்டேன்
மண்ணின் நினைப்பில் நான் நின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com



சொந்தம் சொல்லி உறவுகளும்
சுற்றி வந்து நின்றாச்சு.
உறவுக்காறர் கொடை உடை என்று
மாற்றிய பணமும் கரைந்தாச்சு
கோயிற்காறர் ஒருபக்கம்
கோபுரக்காரர் மறுபக்கம்.
சுத்திச் சுத்தி கொடுத்தாச்சு
சுத்தமாய்க் கையும் வெளிச்சாச்சு

வந்து சேர பணத்துக்கு
விசாக்காட்டின் நினைப்பு வந்தாச்சு.
வங்கி நோக்கிச் சென்றாச்சு.
கொழும்பை நோக்கி விரைந்தாச்சு
டிக்கற் எடுத்துப் பார்த்தாச்சு
திரும்பிட முடிவும் எடுத்தாச்சு.





படிப்பகம்

www.padippakam.com



# முளைவிடும் முத்துக்கள்....

ஈழமண் எம்மண் - அங்கே
கோழைகள்இல்லை.
காற்றைக் குடித்தும் எதிரியின்
கோட்டையை உடைப்பான - ஈழவன்.
குண்டைச் சுமந்தவன் சாவான் - தவறின்
நஞ்சைக் குடித்தவன் மாய்வான்.

தமிழன் உணர்விலே வாழ்வான் - என்றும்
தன்மான வீரனாய்ச் சாவான்.
எதிரிப்படை கண்டுஅஞ்சான் - அங்கே.
எரியும் நெருப்பிலும் வீழ்வான்.
பீரங்கி தாங்கிடும் நெஞ்சு - அதை
பின்னி அணைப்பதோ நஞ்சு.

அச்சமேயின்றி எத்திசையிலும்
அன்னைத்தமிழ் புகழ் பாடுவான்.
அன்னைமொழிக்கது கீழேதான்
அடுத்தவன் மொழியையும் பேணுவான்
ஆள்பவன் ஆளட்டும் அவன் மண்ணையே என்பான்
ஆண்டிடவேண்டும் நான் என்மண்ணையே என்பான்.

தாய்ப்பாலில் சுவையில்லை என்னும்
தரம்கெட்ட மனிதரைக்கண்டாலும் - உன்னின
தாய்ப்பாலில் சுவையுண்டு நீயும்
நக்கிப்பார் என்றவன் சொல்வான் - நாளை
உன்பிள்ளை உன்னையே கேட்பான்.

வாழுமிடமெல்லாம் பள்ளி செய்வான் - அவன்
பாரினில் தமிழ் உயர்ந்திட பணிபுரிவான்.
பாரதி போலவன் வீரப் புரட்சி செய்வான் - தமிழ்
பற்றில்லா தமிழரை உமிழ்ந்திடுவான்.
எந்நாடுவாழ்ந்தாலும் சந்ததியும் தன்
தாய்நாடு மறப்பது இழிவென்றே துடிப்பவன்.



படிப்பகம்

www.padippakam.com



எதிரிப் படைதனை எரித்திடும் தீயையே
என்றும் தன் இதயத்தில் வளர்ப்பான் - தன்
இனத்தை இழிவாக எண்ணிடும் கயவரின்
இரத்தத்தில் குளிக்கும் எண்ணத்தைச் சுமப்பான்
உலகத்தமிழர்க்கோர் தனிக்கொடி
உருவாக்கவே உயிர்தனைக்கொடுப்பவன்.

தீயில் எரிந்திடும் போதிலும் நெஞ்சில்
தன்னின சுதந்திர தீயையே சுமப்பான்.
அங்கம் ஊனம் ஆகிட்ட போதிலும்
எதிரியை சங்கமமாக்கிட மறுப்பான்.
எம்மண்ணின் விடிவுக்காய் உயிர்விடும்
எம் மைந்தர் இறந்தவரில்லையே.
உலகத்தமிழனின் உயர்வுக்காய் - தன்
உடலை உரமாய்க் கொடுத்திடும்
தன்மான வித்துக்கள்.
தணலிலும் முளைவிடும் முத்துக்கள்.





படிப்பகம்

www.padippakam.com



# எங்குதான் செல்வாய் இனி?

அம்மா கண்மணி! அதிகார நாயகி!
இனவாதம் இல்லை எங்களின் குடும்பத்தில்.
சொன்னது நீதானே உண்மையா அம்மணி.
நீயொரு பொய்யின் மலையடி.
வெள்ளைச் சேலை கட்டிய இனவாத பேயடி
தமிழரைத் தமிழை அழித்திட
அடிமை இனமாய் ஆக்கிட
ஐம்பத்தி எட்டில் அப்பா தொடர்ந்தது
எழுபதில் அம்மா அடித்தளம் அமைத்தது
உன் குடும்பத்து நிரந்தர செயலடி.
இன்று நீயும் உன் தம்பியும் இனவாத விழுதடி.

தெரியாதா உனக்கு - இல்லை
தெரிந்து நீ நடிக்கிறாய்.
தமிழர் படையின் அதிரடி வீச்சில்
ஆனையிறவுன் அதிகார உடைப்பில்
அதிகாரநாயகி உனக்கு அதிவேகக்காய்ச்சல்!
அகிலத்தார் நணிலுக்குக் கொடுக்கும்
அமைதித் தீர்வு ஆதரவு வெப்பத்தின்
துடிப்பில் மறந்திட்டாய்
இல்லை நீ மறைத்திட்டாய்.

உள்நாட்டு சங்கதியாய் திரைபோட்டு
உன்னினம் மறைத்த இனவாத போரை
உலகுக்கு தெரியவைத்த
உன் செயலுக்கு நன்றி கண்ணே!
தமிழரைக் காக்கவே போரென்று - புது
தத்துவக்கதை சொன்னாய் நீ கண்ணே!



படிப்பகம்

www.padippakam.com



இன்றும்
உலகத்து நாடெல்லாம் உதவி தந்து
உழுத்த இனவாதத்தை துரத்திடத்தான் சொன்னாலும்.
உன் காதறுக்கும் தம்பியையும் கனையாழி
கதிர்காமரையும் துணைவைத்து நீயும் தடுத்திடத்தான்
நினைக்கின்றாய்.
ஆட்சியும் அடுத்தவன் கையிலாச்சு
தலை ஆட்டும் பொம்மையாய் நீயுமானாய்
படைப் பலம் மட்டும் நம்பி எங்குதான் போவாயினி!?

எம்மை சுதந்திரமாய் வாழ விட்டிருந்தால்
இடிபட்டு, அடிபட்டு, உதைபட்டு
வெடிபட்டுச் சாகும் நிலைவிட்டு
ஒருசொட்டு கண்ணீர் தரைபட்டு
குருதி ஓடாமல்த் த்தானும் தடைபட்டு
நாடாளும் உன் மனபயம் விட்டு
நடந்திருக்கும் உன் நாட்டில் நல்லாட்சி!
ஆனால் இப்போ எங்குதான் போவாய் இனி?

பட்டினியால் பிடிபட்டு! படிப்பதனை நாம்விட்டு
குண்டடிகள் தினம் பட்டு! குழிகளிலே பதுங்கி விட்டு!
மிதிவெடிகள் கால் பட்டு! குழந்தைகளும் துயர் பட்டு!
தினம் பலவாய் உயிர் விட்டு! நாம் சாக
எம் இனம் சாக!

எம்மண்ணை நீ ஆழ முடியுமா? விடுவோமா?
அதுதான் நடக்குமா?
உலகத்தார் எம் உண்மை உணர்ந்து கொண்டார்.
உம்மினத்தார் சதித்திட்டம் புரிந்து கொண்டார்! பேச
யப்பான் வரை சென்று விட்டோம் நாங்கள்
நீஎங்குதான் செல்வாய் இனி!



படிப்பகம்

www.padippakam.com



தமிழா
வெளிநாடு வந்திடவே திட்டமிட்டு
வெளிக்கிட்டோம் வெட்கமத்தைத்தானும் விட்டு
ஆகாயக் கப்பலிலே ஏறி விட்டோம்.
ஆராய்ந்து பாராமல் அன்னியரின்
எல்லை எல்லாம் கடந்து விட்டோம்.
அன்னைத் தமிழுக்கும் அகதிப்
பட்டமொன்று பெற்று விட்டோம்.
என்னதான் நடந்தாலும் கவலைவிடு.
எம்மண்ணை மீட்பதற்கு துணையாகி
எம்தலைவன் கரம் நிறைந்த குண்டாக்கி
எம்மின விடுதலை வெற்றிக்கு வேரானோம்.

எம்முயிர் நிலம் விட்டு! ஈன்றவள் மடிவிட்டு!
கும்பிட்ட கோயில்விட்டு! குடியிருந்த வீடுவிட்டு!
படித்த பள்ளிவிட்டு! பாசம் மிக்க உறவு விட்டு
உருக்குலைந்து நின்றாலும் தாய் மண்மீட்க
வேரானோம் தமிழா பெருமையுறு, பெருமையுறு!

ஏன் இங்கு வந்தோம் எண்ணித்தான் பெருமையுறு !
எமக்கொரு நாடிருந்தால்என்ற ஏக்கமதை
தொலைத்துவிடு!
தமிழா ஏக்கமது தெரியலையா.
எங்குதான் செல்வாய் இனி தமிழா. . !
தாய் மண்ணை மீட்டெடுப்பான் எம் தலைவன்
தலை நிமிர்ந்து நடைபயிலு மண்நோக்கி.

தமிழா எங்குதான் போவாய் இனி
தாய் மண்ணை மீட்பதே உன்பணி
தாய் மண்ணை மீட்பதே உன்பணி.



படிப்பகம்

www.padippakam.com



# போராளிகள்!....

வியர்வை மழையில் குளிக்கும்
கறுப்புச் சூரியன்கள்.
முள்ளுப்பற்றைக்குள் நின்று
முகத்தைக் கிழிக்கும் அக்கினிக்குஞ்சுகள்.

காரைப் பற்றைக்குள் காலைப் புதைத்து
காற்றுப்போகாத கோட்டைக்குள்
காற்றாய்ப்புகுந்து காரியம் முடிக்கும்
கடமையைச் சுமக்கும் கனத்த இதயங்கள்.

குடிசைக்குள்ளே வாழும் குட்டை இமயங்கள்.
பகலை இரவாக்கி, இரவைப்பகலாக்கி
இருட்டுக்குள்ளே வாழும் உதயங்கள்.

நம்பிக்கை தொலைந்து போனதால்.
நாணயம் கரைந்து போனதால்.
போதிமரச் சாமிகளால் புத்தரின்
போதனை எரிக்கப்பட்டதால்
நம்பிய தலைமைகள் நக்கத் தொடங்கியதால்..

ஆசையைத் தொலைத்த சித்தார்த்தரின் பேரால - புதவி
ஆசைக்காய் மூட்டைப் பூச்சிகளாய் மனிதம் நசிக்கப்பட்டதால்
தாக்கும் கொடுமையை எதிர்கொண்டு தமிழினம் எதிர்க்காது.
தலைவிதியென்று தமிழினம் உணர்வை இழந்ததால்
ஓய்வெடுக்க மறுக்கும் உணர்வு கொண்ட சூரியக்கதிர்களாய்
உரிமைக்காய் உயிரை விதையாக்கும் சிகப்புச் சூரியன்கள்
வீச்சு வாளின் இருபக்க கூர்களாய் விலைபோகா.
விலைமதிக்க முடியாத மாணிக்கங்கள்
எம்மின விடுதலைப் போராளிகள்.
எம்மினவிடுதலைப் போராளிகள்.



படிப்பகம்

www.padippakam.com



# கார்த்திகைத் திங்களில் உயிர்நாள்..27..

கார்த்திகைத் திங்கள் இருபத்தி ஏழு
நெஞ்சுக்குள் தீ எரியும் நாள்.
வீரத்தைக் கண்டிடா உயர் மானிடம்
தம்முயர் வீரத்தைக் கண்டிடும் நாளிது.
தியாகம் சிகரமாய் துலங்கிடும் நாளிது.
தியாகத்தின் உச்சம் சொன்ன தெய்வீக
புத்திரர் நினைப்பு நாளிது.

பெண்ணுக்கும் பொன்னுக்கும் பேதலிக்கும் இளவயதில்
மண்ணுக்காய் உயிர் கொடுத்த எங்களிளம் குருத்துக்களின்
உணர்வு விழிக்கும் நாள்
உள்ளம் சபதம் எடுக்கும் நாள்.

பெற்றதாய் கதறியழ கூடப்பிறந்தவளும் துவண்டுவிழ
தமிழ்த்தாயின் மானம் காக்க புறப்பட்ட தியாக வீரர்களின்
புகழுடம்பு புதைந்த இடம் தீபஒளிகொடுக்கும் தீபநாள்
தமிழினத்தார் தம் நெஞ்சில் சபதம் எடுக்கும் நாள்.

இருப்பது ஒருயிர்தான், போகட்டும் என்னின விடுதலைக்காய்
எடுக்கிறேன் ஓர் சபதம் சுமக்கிறேன் குண்டென்று
போர் தொடுத்தங்கு, எதிரி படையொித்து
வெற்றிக்கு விதையான மாவீரர் நினைப்பு நாள்.
பயந்து பயந்து சாவதா!? எதிரி குண்டுபட்டுச் சாவதா?
நரிக்குணத்தார் செயலுக்கு நாமும் சரிந்து வீழ்வதா?
சேரர், சோழர் வீரத்தை சேற்றில் புதைத்து மாழ்வதா
என்று உரைத்து தமிழ்
மறவர் இன தன்மானம் காக்க

தாய்மண்ணின் விடியலுக்காய், தமிழீழச் சுதந்திரத்தை
பெறுவதற்காய் தணலான வேங்கைகளின் விழிப்பு நாள்!
தமிழ் வீரம் தன்மானத் தேரேறி ஓடும் நாள்
வாருங்கள் ஒளியேந்தி வணங்கிடவே!
தியாகத்தின் சுடர்ஒளியை போற்றிடவே.
ஊரெல்லாம் கூடி நாம் ஒளியேந்தி
உறுதி செய்வோம் தியாகத்தின் உயரித்தை.
உறுதி செய்வோம் தியாகத்தின் உயரித்தை.



படிப்பகம்

www.padippakam.com



# சமாதான ஒளி

நணத்தின் நான்கு சுவருக்குள்ளே
அடைபட்ட எங்கள் உடலுக்குள்ளே!
உயிர்த்த பிணத்தின் உயிரைக்காட்ட
ஒளியாய்க் கிடைத்த சமாதானம்.

வானத்துக்கும் மேகத்துக்கும்
ஏன் உறவு வந்தது.
மின்னலுக்கும் இடிக்கும்
எப்படி வந்தது உறவு.

மழைக்கும் மண்ணுக்கும்
ஏன் வந்தது உறவு.
மீனுக்கும் தண்ணிக்கும்
எப்படி வந்தது உறவு.

உனக்கும் எனக்கும்
உறவு நெருக்கம்
உறவு இல்லையேல்
வாழ்வே இறுக்கம்
என்ற நிலைக்கு
உண்மை தெரிந்ததால்
ஏற்பட்ட வெளிச்சம்
இதுதான் இங்கே சமாதானம்.

பாதகம் செய்யும் பயங்கரவாதிகள்
நாதிகள் அற்ற நஞ்சுப் பிராணிகளென்ற
மஞ்சள் போர்த்த மாகாசாமிகள் கூட
போற்றிப் புகழும் பெருமை தந்தது.
நோர்வே போட்ட விதையின் மரமாய்
பூத்துச் சிரிக்கும் மலரின் கொத்தாய்



படிப்பகம்

www.padippakam.com


ஈழவன் அகத்து இளகிய சிரிப்பாய்
தென்னாங்கீற்று ஒளியைச் சிந்தும் சமாதானம்.

காற்றைக் கிழிக்கும் வீர நினைப்பு
சேற்றில் நடக்கும் உள்ளத் துடிப்பு
புலியின் பாயச்சல் மூன்றாம் நினைப்பு
பூவாய் மலர்ந்த ஆனையிறவின் உடைப்பு.

கண்டு நடுங்கிய சிங்கம்மா ஆட்சி
இனி முடியாதென்று முனகிய படையின்
குமுறிய அம்மா நிலையைக் கண்டு
ரணிலார் தேடியெடுத்த முடிவே சமாதானம்.

பண்டா பெயரைக் கொண்ட தளத்தில்
மூண்ட தீயில் அழிந்த சொத்து
கண்டுதானே அறிந்தது அகிலம்
புலியில் உண்டு பலமென என்று.
புரிந்த உலகம் தேடி உரைத்து
நோர்வே நாட்டைத் தேடி அழைத்து
கொண்டு வந்த தேடல்தானே சமாதானம்.

துன்பப்பட்ட ஈழத்தமிழர் வாழ்வில்
துயர் துடைக்க வந்த சமாதானம்.
தேசம் மறந்த நம்மவர் சிலரை
தேடி நினைக்க வைத்த சமாதானம்.
தேடி அழித்த சிங்களம் தமிழரை
செங்கம்பளம் விரித்து வரவேற்ற காட்சியை
தேசம் அறிந்திட வைத்திட்ட சமாதானம்
களத்தில் கண்ட முகத்தை நேரில்பார்த்து
சபையில் சிரித்துப்பேச வைத்த சமாதானம்.



படிப்பகம்

www.padippakam.com



சமாதானக் கூட்டை உடைக்கும்
சிந்தனை எங்கள் நெஞ்சத்திலில்லை.
கூடிவாழும் நினைப்பில்தானே
கேட்டோம் நாங்கள் சமஷ்டி.
ஒன்று கூடி வாழ்ந்தால் தானே
உலகமுயரும் உண்மை தெரிந்தவர் நாங்கள்.

தேடி அழித்தீர் எங்களை நீங்கள்
நாடிப் பிடித்தோம் பரிவினை நாங்கள்.
என்றும் நாங்கள் இணைந்திட விருப்பம்
எங்கள் உரிமை தந்திடல் வேண்டும்
என்பதைச் சொல்ல வந்தது சமாதானம்.
என்றுதான் எண்ணுறோம் இன்னமும் நாங்கள்.





படிப்பகம்

www.padippakam.com



# நம் பணி என்ன?

வங்கக் கடல் சீறி
பொங்கி எழுந்தது போல்
எம்மீழ தங்கத்தமிழர் இனம்
நாலுரெண்டு கோடி தமிழர் - ஒரு
நாளுமெண்ணா தமிழ் உரிமைப்போரை
தாமேந்தி நிற்கின்றார்.

ஆனால்
நோய்க்கு மருந்து செய்ய
நோக்கமில்லா சித்தாத்தர் ஆட்சி
பிச்சைக்காறன் கால் புண்ணாய்
பிரச்சனையை பெரிதாய்க் காட்டி
அகிலத்தைக் கூட்டி அம்மாவைக்காட்டி
ஆதாயம் தேடுது அபிவிருத்தி கூறி.

ஆனால்
உத்தமர்கள் போல் நடித்து
உலகத்தை நம்ப வைக்கும்
உலகப் பெரு நாடுகளோ
தாம்செய்யும் ஆயுதத்தை விற்க
நாக்களவில் ஜனநாயகம் பேசி - விற்பனைச்
சந்தைக்கு இடம்தேடி அலையுதுகள்.

வெள்ளிக் காசுக்கு விலைபோகும்
விலைமாதாய்
சிங்களத்தார் ஆட்சி பசுத்தோலை
போர்த்தி பாசாங்கு செய்கிறது
சமாதான தீர்வென்று.
நிதிவேண்டிக் குவித்து தேர்தல் நடத்திடவே



படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில்
தன்னினத்தை மீட்டெடுக்க
தன் உயிரை அர்ப்பணித்தார்
தமிழீழமறவர் படை.
சிந்தியாதிருப்பாரா சிந்திக்க மறப்பாரா
அலை கடல் தாண்டிட
பலம்தந்த ஆயுதம் வேண்டிட.

இங்கேதான்
கல்லடுப்பு மூட்டி கஞ்சிதனை காய்ச்சுகையில்
செல்லடிகள் பட்டுச் சிதறுகின்ற
எம் உறவுகளை காப்பதற்கு
பஞ்சணையில் பயம்மறந்து படுத்திருந்து
பால்ப் பழங்கள் புசிக்கின்ற
எங்கள் உறவுகளே நம் பணியென்ன!!?






படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த்தாய் சத்தியகீதம்

எடுப்பு

தங்கத் தமிழே..! எங்கள் உயிரே..!
சரணம் சரண மம்மா-

தொடுப்பு

பொங்கும் தமிழே! புலிகொள் கொடியே
சரணம் சரணமம்மா
(தங்கத் தமிழே...)

முடிப்பு

வேற்றுமையின் துயர் புரிந்துவிட்டோம்
வேங்கைகள் பாதை சேர்ந்துவிட்டோம்
தமிழ்த்தாயே உந்தன் அரியணைக்காய்
தமிழர் நாங்கள் இணைந்து விட்டோம்
சத்தியம் சத்தியமே அம்மா.
ஆயிரம்! ஆயிரம் சத்தியமே (தங்கத் தமிழே....)

ஒன்றுபட்டோம் ஓரணிவந்தோம்.! உன்பணி செய்திடுவோம்..!
உள்ளம் திறந்தோம் உண்மை உணர்ந்தோம்..!
ஒற்றுமை ஆகிவிட்டோம்.! அம்மா ஒற்றுமையாகிவிட்டோம்..!
சத்தியம் சத்தியம்..! அம்மா ஆயிரம் சத்தியமே..! -- (தங்கத் தமிழே....)

முட்டி உடைப்போம் எதிரி படை அணி..!
வெட்டிப் புதைப்போம் கன்னி வெடியணி..!
உளத்தில் உறுதியை விதைத்து விட்டோம் எங்கள்
உயிரையே உரமாய் கரைத்திடு வோம்.
சத்தியம் சத்தியமே..! அம்மா..! ஆயிரம் சத்தியமே..!! (தங்கத் தமிழே...)

அகிலம் பூரா பகையிணைந்து
ஆயுதம் கோடி குவித்தாலும்
ஈழம் உன்னை அரியணையில்
இருத்தும் நம்பு எம்தாயே..! (தங்கத் தமிழே...)

தொண்டினை நாங்கள் தொடர்ந்திடுவோம் - வரும்
தொல்லைகள் யாவையும் மாற்றிடுவோம்
தங்கத்தமிழின் பெரும் புகழை - இந்த
தரணி எங்கனும் பரப்பிடுவோம்.
சத்தியம் சத்தியமே அம்மா..!
ஆயிரம் ஆயிரம் சத்தியமே.
சத்தியம் சத்தியமே..! அம்மா..!
ஆயிரம், ஆயிரம் சத்தியமே..! -- (தங்கத் தமிழே...)



படிப்பகம்

www.padippakam.com



# தீவிரடா தேசம் உன்கையில்......!

கண்ணீர் என்ன நம்சொத்தா.
கானல் நீர்தான் நம்வாழ்வா.
தமிழன் தணலாய் மாறி பல ஆண்டாச்சு.
சஞ்சலம் ஏன்தான் நிலையாச்சு.
உயிரை நாங்கள் உரமாக்கி உயர்
உதிரம் சிந்தி செதுக்கிய வாழ்வுக்கு!
சிங்கச் சீருடையான் தடை ஏனாச்சு.
நம் கரங்கள் இணைந்தால் விடையாச்சு!

சும்மா இருந்தால் சோறில்லை
சுதந்திரம் கூட எமக்கில்லை.
நெஞ்சில் தீயை நீ மூட்டி
நிமிர்ந்து நின்றால் துயர் இனியில்லை.

வெள்ளைப் புறாவாய் வேஷம் போட்டு
வேடிக்கை காட்டுறார் அண்ணன் றணிலார்
நீதிதர மூன்றாம் தரப்பு ஒன்றைக் கேட்டால்
முகமூடிகள் படையை கூட்டுகிறார்.

உலகச்சபைதனைக் கூட்டி - தன்
நெஞ்சத்து உண்மைதனை உரைப்பாரா?
வஞ்சகத் தனத்தைதான்காட்டி புஸ்சின்
வஞ்சக வலையை எம்மேல் விரிப்பாரா?
அப்பம் பகிர்ந்த குரங்கார் கதையை
ஐயா ரணிலார் எமக்குச் சொல்வாரோ?
ஆப்பு இழுத்த குரங்கார் கதையை
அறிமுகம் செய்து ஐயா வைப்பாரோ.



படிப்பகம்

www.padippakam.com



உயிரை விதைக்கும் மறவர் படையின்
உயர்தலைவன் உலகைக்கூட்டி சொல்லிவிட்டான்
உறுதி குலையா எம் கொள்கை
உயர் ஈழம்தானே உறுதியென்று.

பகைவர் கதையை விட்டுவிடு - உயர்
பாயும் புலியாய் மாறிவிடு.
நிமிர்ந்து வானம் தொட்டிடடா - தாய்மண்
நினைப்பில்தான் கண் விழித்திடடா.

உலகைக்கூட்டி பயம் காட்டும்
உலுத்தர் நினைப்பும் பொடிப் பொடியாகும்!
உறுதி குலையா எம்தலைவன் கனவு - நாளை
உன் கையில் விடியும் நாடாக.





படிப்பகம்

www.padippakam.com



# இரவல் தாயகத்தில் நாங்கள்...!

நல்ல தலைப்பிது நம் தமிழர்
நிலை உரைக்க.
நாட்டம் இருந்தால் கொஞ்சம்
நல் அமைதி காத்திடுவீர்.

எனக்கு இது இரவல் தாயகம்
என்பெயர் அகதி!
என்பேரனுக்கு இது சொந்தத் தாயகம்
அவன் பெயரும் அகதிதான்..!

எப்படித்தான் வாழ்ந்தாலும்! எந்த மொழி படித்தாலும்
தமிழிச்சி குருதியென்றால் தமிழன் தமிழன்தான்.
மருத்துவத்தைத் தான் படித்து மக்கள் பணி செய்தாலும்
அரசியலைத்தான் படித்து மக்களைத்தான் ஆண்டாலும்
அகதித் தமிழனிவன் என்ற பெயர் மாறாது.
அகதித் தமிழன் என்ற புது பரம்பரையே வளர்ந்து வரும்.

பஞ்சமில்லா வாழ்விருக்கும் பஞ்சணையும் காத்திருக்கும்.
அகதியென்ற அவப் பெயரும் அதனோடு சேர்ந்திருக்கும்.
நம் நெஞ்சில் ஒரு நெருடல் நிலைத்தேதான் தினமிருக்கும்.
சுதந்திரமும் நிச்சயமாய் குளியலறைதனிலிருக்கும்.
இதற்குத்தான் பெயர் இரவல் தாயகம்..!

சொந்தம் இல்லாத ஒன்றுக்கே ! இரவலென்ற பெயராச்சு.
உரிமை இல்லா நாட்டில் சுதந்திரம்தான் எதற்காச்சு.
விடியாத இரவென்று ஒன்றில்லை பூமியிலே
விழித்திருந்து கடன் முடித்தால் தாய் மண்ணும் விடியலிலே!
விடியல் வரும் காலம் வரை காத்திருக்க
எங்களுக்குப் பொறுமை இல்லை!
முடியாத ஒன்றில்லை என்ற
தம்பி முடித்து வைத்து காத்திருக்கான் நமக்காக!

தமிழனின் வாழ்க்கையில் தீர்வுப் பொதிகள் ஆயிரம்!
திறப்பைத் தொலைத்துவிட்டு தேடுகிறான் நாடுநாடாய்!
வாழ்க்கையில் ஆசையை மலையாய் வளர்த்து விட்டு
அவசர வாழ்க்கையில் தினம் அவலப் படுகிறான்.
பிள்ளைகள் வாழ்க்கையை பிச்சே தொலைக்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com



பிள்ளைகள்
தமிழைப் படிப்பிக்க நல்ல கவனம் எடுக்காமல்.

கனடா போவதா! லண்டன் போவதா! பிள்ளைகள் படிக்க
ஆங்கிலம் படித்தால் டொக்டர் - இஞ்சினியர்
தேடி வருமாம் மாப்பிள்ளை பணத்தோடு! என்று
கனவுலகில் வாழும் பெற்றவர்கள் நிலையால்.
கலங்கி நிற்குது பிள்ளைகளின் எதிர்காலம்.
ஒவ்வொரு தமிழன் நெஞ்சத்து ஓரமும்
நனைக்க வேண்டிய தாயக நினைப்பு
வெள்ளமாய் வந்து நெஞ்சை நிரப்பும் வரைக்கும்
இரவல் தாயக வாழ்வே நிச்சயம்.!

நாங்கள் மேதாவிகள் ! புத்தனைவிட புத்தி சாலிகள்!
மற்றவன் போதனையை ஏற்க மறுப்பவர்கள்
நாங்களே போதிக்க வேண்டும் என நினைப்பவர்கள்.
மீனை கொக்கு விழுங்குவது தெரிந்து
அந்தக்கொக்கை விழுங்கும் ஆசைக்காறர்கள்
அதனால்தான் இரவல் தாயகத்தில் நாங்கள்.

அயலான் நிழலுக்கு வளர்த்த வேம்பு
எல்லை தாண்டி நம் வேலியைக் கடந்ததால்..!
வேம்புக்கு பங்கு கேட்டு கோடு சென்று
அயலான் உறவுக்கு வேட்டு வைத்து
போட்டி பொறாமையை மூட்டை கட்டியதால்
இன்று இரவல் தாயகத்தில் நாங்கள்..!

நாங்கள் பேரறிவு படைத்தவர்கள்
தென்னைத் தோட்டத்தை அழித்து மிளகாய் நட்டு
பெரும் பணம் சேர்க்க நினைத்தவர்கள்.
பக்கத்து வீட்டுக்கோழி எங்க வீட்டில் முட்டையிட்டால்
கோழியையே உரிமை கொண்டாடியவர்கள்.
குதிரை வண்டியில் எம்மை ஏற்றி இழுத்தோரை
முட்டாள்கள் என்று நினைத்தபடி அவர்கள் பாராட்டில் மயங்கி
எம்மினத்தின் எதிர்கால சந்ததியை நினைக்க மறந்தவர்கள்.
அதனால்தான் இன்று இரவல் தாயகத்தில் நாங்கள்.
ஆண்டாண்டு காலமாய் அடிமையாய் வாழ்ந்தோம்.
அடிபட்டோம் உதைபட்டோம் அகதிகள் ஆனோம்.
பொட்டிழந்தோம் பூவிழந்தோம் பட்டினியில் துடிதுடித்தோம்



படிப்பகம்

www.padippakam.com



கட்டிய தாலி கழுத்தில் ஏறுமுன் கைவிலங்கேற்றோம்.

கல்லடுப்பு மூட்டி கஞ்சிதனை காய்ச்சுகையில்
செல்லடி பட்டு உடல் சிதறி சிதையானோம்.!

எம்மினிய நினைவுகளை ஈழமண்ணில் புதைத்து விட்டு
ஏறிவந்தோம் கப்பல் எவருக்கும் தெரியாமல் உயிர்காக்க!
ஆயுதத்தை ஒப்படைத்தார் அமைதியாய் வாழ எண்ணி
உண்ணா நோன்பிருந்து உயிர்த் தியாகம் செய்தார்கள்
சந்திரிகா போட்ட தடைகள் அத்தனையும் தாண்டி
சரித்திரம் படைத்து விட்டார்கள் - ஐம்பதாண்டு
அடிமைத் தளையான ஆனையிறவுத் தடை உடைத்தெறிந்து.

நீதி வந்து எங்களுக்கு நீண்டகரம்தான் நீட்டி
அநியாய அம்மானை கூட்டில் அடைத்து விட்டு!
நோர்வே வந்து எங்களுக்கு நீதிக்காய் துணையிருக்கு.!
இங்கேயும் தவற விட்டால்
நிரந்தரம் இரவல் தாயகத்தில் நாங்கள்.!

சோதனைகள் ஆயிரம் சுற்றி வளைத்தாலும் ! எம்தலைவன்
சாதனையாக்கியே வெற்றிச் சரித்திரம் படைப்பான்.
நாளைய தமிழன் தலை நிமிர்த்தி நடந்திட
எடுத்ததை முடிப்பான் என்பது உறுதி - நாமும்
தலைக்கு மேலே வெள்ளம் வரும் முன்
எம்பணி தொடர்ந்தால் தாயகம் விடியும்
சொந்தத் தாயகத்தில் நாளை நாங்கள்

இரவல் தாயகம் விட்டு அகன்று
சொந்தச் சுதந்திர தாயகக் குளத்தில் குளிப்போம்.
மண்ணின் மைந்தர் மகிமை போற்றி
கொள்கை போற்றி கொடியை ஏற்றுவோம்

சத்தியம் தர்மம் வென்றதாய் போற்றி
அதர்மத்தை நீதி மன்றினில் நிறுத்துவோம்.
சத்தியம் சத்தியம் சத்தியம்
என்று தான் கூறி
அன்புடன்
உங்கள் பொன்னண்ணா நானும்
போய் வர உங்கள் விடை கேட்டேன்!



படிப்பகம்

# தூண்டில்

நூலினில் தொங்கும்
சிறு புழுவிற்குள்
தூண்டில் இருப்பதை
அறியா மடமீனைப்போல்...

ஆள்வோர் தொங்கவிடும்
பதவியெனும் நூலுக்குள்ளும்
தொங்க விட்டிருப்பது
கொழுவியிழுக்கும் தூண்டிலென
எண்ணா அரசியல் தலைமைகள்...

மதிகெட்டு அலையாமல்
சுயமாக உணரும் நாள்வரை
தமிழரின் வாழ்க்கை
குண்டோடும், கடலோடும் தானோ?
ஓநாய்களின் திட்டமும், செயலும்.
ஆட்டுமந்தைகளின் நலனுக்காக
காட்டுச்சிங்கம் கூட ஒருநாள்
காட்டியதாம் கருணை சுண்டெலிக்கு
நாட்டையாளும் சித்தாத்தர் சந்ததி
நம்மினத்துக்கு கருணை காட்டினால் புதுமை - இதை
நம்பிடும் தமிழ்த் தலைமைகள் மடமை

www.padippakam.com



# சுதந்திரவிழா...

ஆண்டுகள் ஐம்பத்தி ஆறு - நாம்
அடைந்தோமாம் சுதந்திரம்.
யாருக்குக் கிடைத்தது சுதந்திரம்.
புத்தசாமிக்கே கிடைக்கல சுதந்திரம்!
யேசுசாமிக்கும் கிடைக்கல சுதந்திரம் - சிங்கள
பேரினவாதிக்கே கிடைத்தது சுதந்திரம்.

குளத்து மீனுக்கு கொக்கு
கொடுக்கலாம் சுதந்திரம்.
கூரைவாழ் எலிக்குப் பூனை
கெடுக்கலாம் சுதந்திரம்.
புள்ளி மானுக்கு வனவேடன்
கொடுக்கலாம் சுதந்திரம்.
குருதி சிந்திடும் தமிழர்க்கு - சிங்களப் பேரினவாதம்
கொடுக்குமா சுதந்திரம்

பட்டமரம் துளிர் விடலாம்.
சுட்ட மீன் உயிர்பெறலாம்.
வட்டமதி கூட நம்முடலை.
சுட்டெரித்த கதை வரலாம்.
செத்த பிணம் நடைபயின்று
சிதைக்குமது சென்றிடலாம்
சத்தியமாய்த் தமிழர் சுதந்திரத்தை..
எடுப்பது நிச்சயமே.
கிடைப்பது பூச்சியமே.



படிப்பகம்

www.padippakam.com



சிங்கத் தமிழர் எம்மை
சித்தெறும்பாய்த் தானெண்ணி
தங்கத் தமிழ் தன்னை
தானழிக்க நினைத்தவர்கள்
தரணியிலே தமிழரினம் தலைநிமிர
தருவாரா சுதந்திரத்தை.

கருவாட்டுக் கூடையில் கற்பூர வாசமா?
நரியாரின் சிந்தனையில் நலம் இருக்குமா?
காக்கை சிறுத்தாலும் குயிலாகப் பாடுமா?
நாயின் வாலைத்தான் நிமிர்ந்திட முடியுமா?
கொடுக்க விரும்பாமல் கரம்தான் நீளுமா?

எடுப்பது நிச்சயம் சுதந்திரம்!
கிடைப்பது பூச்சியம் சுதந்திரம்
நம்பியது போதும் போதும் தமிழா!
பச்சைமரத்தாணிபோல் பற்றிடுவோம் நெஞ்சுறுதி
வெற்றிதனை நாமெடுத்து
தமிழீழ சுதந்திரப்போர் முழக்கம் செய்திடலாம்..





படிப்பகம்

www.padippakam.com



# கனவு நனவானால்.....!

பட்ட துயர்களை
பாட்டாக எழுதியே
பாடிய தமிழரை
பார்த்திட்டேன் ஈழத்தில்.

அகதி வாழ்க்கையும்
அடிமை வாழ்க்கையும்
அகலும் என எண்ணி
ஆடினர் பாடினர் புலம்பெயர்
அகதித்தமிழரும்.

வந்த சமாதானம்
வளரும் என எண்ணி
வாடிய உறவுகள் முகம்
வருடும் நிலை பார்த்து
கூடியே நின்று கும்மாளம் போட்டனர்.
பாசத்தை எண்ணி பாடி மகிழ்ந்தனர்.
நோர்வேயின் புரிந்துணர்வை
தமிழர் நோய் தீர்க்கும் மருந்தாயெண்ணி.

கண்ணினை மூடி கண்
அயர்ந்திட்ட வேளையில்
கற்கண்டுச் சுவையோடு
கண்டிட்ட இக்காட்சியை
கனவென்று நினையாது
கண்ணினைத் திறந்திட்டேன்.
விழித்திட்ட பின்தானே
விளங்கிட்டேன் கனவென்று.

கனவது நனவாக மாறிடும்
நாளெது.
சிங்கள இனவாதப் பேயது
அழிந்திடும் நாளெது.



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்காலத் தலைமுறையும் முடிவற்ற ஓட்டமும்...

தமிழ்ப் பிள்ளையாய் இருக்குமோ!
தமிழில் கேட்டேன்.
தளதளத்து சொன்ன பதிலில்
தேங்கிக் கிடந்தன
சில தமிழ்ச் சொற்கள்.

டெனிசில் கேட்டேன்
சொல்லத் தொடங்கியது.
முடிவில் தளம்பல் இருந்தது.
பிரஞ்சில் கேட்டேன்
புரண்டது நா புரியவில்லை எனக்கு!
ஆங்கிலத்தில் கேட்டேன்
நடன நடையோடு சொன்னதால்
புரிந்து கொண்டேன் ஓரளவு.
அவள் பெயர் டெனிஸ்சியாவென.
நிச்சயமாக இவள்
வெள்ளைக்காறப் பிள்ளையல்ல.
பெற்றவர்களின் முடிவற்ற ஓட்டத்தால்
தடுமாறிய ஒரு தமிழ்ப்பிள்ளை என்று!

நாம் எம் இனத்தின்
விலைமதிக்க முடியாத
ஒரு மாபெரும் சொத்தான
எம் எதிர்கால சந்ததியை
உலக மானிடவியலாளரும்
உலக வரலாற்றராசிரியரும்
கண்டுபிடிக்க முடியாத
ஆய்வுக்குள்.
தமிழர் நாம் நம் சந்ததியை
விளைவித்துக் கொண்டிருக்கிறோம்.




படிப்பகம்

www.padippakam.com



பேராசையென்ற பேயாட்டத்தால்.
பெற்றவர்கள் எமது முடிவற்ற
தேசமாற்ற ஓட்டத்தால் என்பதை
சிந்தியுங்கள் செயல்படுங்கள

இரவலிது ஒருபோதும் சொந்தமென எண்ணாதீர்
சொந்தமண் எங்களது அன்னைமண் ஈழம்தான்
சொந்தமண் அடிபதிக்க நெடுநாளும் இல்லைகாண்.
செந்தமிழும் அரசோச்சும் நம்பிக்கை வந்தாச்சு.
எம்மோடு சந்ததியும் எழுந்தங்கு வரவேண்டும்.
இன்பத் தமிழ்பாடி இன்னிசையும் தரவேண்டும்.
இதயத்தில் இதை இருத்தி எதிர்கால சந்ததிக்கு
தரமாக வளமாக தமிழ் மொழியை ஊட்டிடுவோம்





படிப்பகம்

www.padippakam.com



# யேசுபிதாவே வந்திடுவீர்......
# தமிழர் விடிவைத் தேடித் தந்திடுவீர்

மரித்து எழுந்த யேசுபிதாவே - அன்னை
மரியாள் பெற்ற மாட்சிமை மகனே
கேட்டதைக்கொடுக்கும் யேசுபிதாவே
கேட்டது கிடைக்க வழிசெய் பிதாவே
வந்திடு பிதாவே பிறந்து வந்திடு - தமிழர்
வதைக்கொரு தீர்வைத் தந்திடு.

உண்ணாதிருந்தும் உதை கொடுத்தார்கள்.
கல்வி கேட்டோம் களை எடுத்தார்கள்.
உரிமை கேட்டோம் உயிர் பறித்தார்கள்.
பொறுமையிழந்து நாங்கள் போர்தொடுத்தோம்
உலகத்தாரைத் தேடி உதவிக்கழைத்தோம்.
ஒருத்தர்கூட இதயம் திறக்கவில்லை
குளத்தைக்கலக்கி கெழுறு பிடிக்கப் பார்க்கிறார்

தோழில் போட்ட துவக்கை நாங்கள்
தூரம் போட்டு தள்ளி வைத்திட்டோம்.
உங்கள் தட்டச் சொன்ன வார்த்தைநம்பி
தட்டிக்கொண்டே இன்றும் நிற்கின்றோம்.
இதயம் திறந்து எவரும் வரவில்லை - திறக்கவந்த
நோர்வேயும் திரும்பிப் போன கதையாச்சு.
தமிழர் நெஞ்ச நம்பிக்கை தீயில்பட்ட நூலாச்சு.
மக்கள் துன்பம்தான் தீர்க்க வேதனைத்தீயில் எரிந்தவரே.
வேண்டி நிற்கிறோம் உன்வரவை விடிவைத்தேடி தந்திடுவீர்




படிப்பகம்

www.padippakam.com



அரச கொடுமை கண்டவரே
அரக்கர் கொடுமை பார்த்தவரே
தாயின் பாலில் சுவைபார்க்கும்
தனையர் சிலரைக் கண்டவரே
மாட்டுத்தொழுவம்தான்பிறந்து
சிலுவை தன்னைத்தான் சுமந்து
மக்கள் துயரைத் துடைக்கும் யேசுபிதாவே
எங்கள் துயரைத் தீர்ப்பதற்கே முடிவாய் நீயும் வந்துவிடு.





படிப்பகம்

www.padippakam.com



# மாவீரர் மனிதரல்ல!

ஈழத்தமிழன் இதயத்து ஒளியானீர்
உணர்வுத்தமிழர் உள்ளத்து விழியானீர்
வையகத் தமிழரின் வாழ்வுக்கு துணையானீர்
தமிழீழ தேசத்து அடித்தள உரமானீர்!

எம்மைக் காப்பதற்கும் எம்மண்ணை மீட்பதற்கும்
எமக்கு உணர்வூட்டி, மண்ணில் புதைந்தீரே.
மொட்டனாக வாழ்வதற்கும் முடிச்சாயம் போடுதற்கும்
துடியாக துடிக்கின்ற முட்டுக்காய் இளவயதில்
தாய் மண்ணுக்காய் உயிரைக்கொடையாக்கி மாவீரரானீரே.

அன்னைத் தமிழ்த்தாயின் பெரும் புகழை அகிலமெல்லாம்
எண்ணிக் கதைக்கின்ற எம் தலைவன் செயல்த் திறனை
எண்ணி மகிழ்ந்திருக்க எங்களை வைத்து விட்டு
விண்ணுலகம் சென்றுவிட்ட வீராதி வீரர்களே.

உங்களை எண்ணித்துதிக்கின்றோம் உள்ளத்தில் பதிக்கின்றோம்
கையில் மலர்கொண்டு கல்லறையை நாடுகின்றோம்.
கண்ணீர்த் துளியாலே கல்லறையை நனைக்கின்றோம்
வீரருங்கள் நினைப்பாலே வீழ்ந்தெழுந்து நடக்கின்றோம்.

வானத்து ஒலியலையில் வந்துவிழும் கவிவரியில்
மாவீரர் உங்களைத்தான் தமிழ்ப்பா பாடி வாழ்த்துகின்றோம்
வையகத்தில் தமிழ்வாழ தமிழ்வீரம் உயிர் வாழ
விதையான மாவீரர் உங்கள் நினைப்பாலே எங்கள்
குருதிக்குழாயோடும் வெப்பக்குருதியிது சத்தியமே.

மனிதரல்ல மாவீரர் சத்தியமாய்த் தெய்வங்கள்
உமைநினைக்காத் தமிழர் உண்மையில் தமிழரில்லை
படியேறி கால்நடந்து பழனிமலை செல்வோரே
கால்நடந்து கல்லறைக்கு பொல்லோடும் சென்றிடுங்கள்



படிப்பகம்

www.padippakam.com



# நெஞ்சு பொறுக்குதில்லையே...!

எத்தனையோ பெற்றவர்கள் பட்டினியால்
தாய்மண்ணில் இன்னும் இன்னும்!
உணவிட்டு பசிதீர்க்க பணம்கொண்ட
மனிதர் இல்லையில்லை ஊரினிலே
பிள்ளைகளோ ஆயிரக் கணக்கில் பணம் கொட்டி
மண்டபமும் தான் எடுத்து - பிள்ளைக்கு
இருபதாம் பிறந்தநாள் விழாஎடுத்து
மீதி கொட்டுகிறார் உணவை குப்பையிலே.
நெஞ்சு பொறுக்குதில்லையே - புலம் பெயர்
மக்களின் செயல் நடப்புக்கண்டு.

பட்டமரம் என்றாலும் பறவாய் இல்லை
பாதமதைக் கிழிக்கின்ற முள்ளு மரமென்றாலும் பறவாயில்லை
சிங்கத்தின் கோட்டைதனை சிதைக்கவல்ல வயிரமரம்
தங்கத்தமிழர்களின் முத்துத் தரம்கண்ட
கறுத்தக் கொழும்பான் மாமரம்
கனவான்கள் சபைஏறும் கருங்காலி நிறத்து மரம்
புயல் காற்றுக்கும் அசையாத மூலவேர் கொண்ட உறுதிமரம்
வீணர்களின் சதித்திட்டத்தால் வீதியிலே சரிந்தசெய்தி தானறிந்து
நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த கொடியமானிடர் செயலைக்கேட்டு.

சத்தியமாய் நானில்லை ஒருநாளும் இனவாதி
றணிலாரைச் சங்கடத்தில் போடவொரு கருமாரி
அன்றொருநாள் தரைப்படையில் அன்ரன் முத்துக்குமாரு
அதன்பின்னால் கடல்படையில் ராசன் கதிர்காமர்
இப்போது காவல் படையில் ஆனந்தராசா இதுவெல்லாம்
எங்கள் கட்சியின் வெற்றிக்கு சத்தாக்கும் திட்டம் - இதுதானே
எங்கள் குடும்பத்து அரசியல் வேலைத்திட்டம்
நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த அரசியல்வாதிகள் செயலைக்கண்டு.



படிப்பகம்

www.padippakam.com



தமிழ்த்தாய்க்கு அரியணையை பெறுவதென்றே ஓடிவந்தார்
தமிழ்காக்க அயல் நாட்டில் படைபயின்றார்.
தங்கமென சொல்லியவர் தலைநிமிர்ந்தார் ஒருகாலம் : பின்
தகரமென காட்டி இவர் எதிரி படையிணைந்தார்.
தமிழனைக் கொன்றேதான் தலைவரானார்.
தமிழன் தலைக்கொரு பதவியாய் அமைச்சரானார்
இத்தனை வீரசாதனைத் தலைவர்கள் இன்னும் நம்மிடையே!
நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த விடுதலை வீணர்கள் செயலைக்கண்டு.

உலகினில் உயர்ந்தநாடு உயர்வளம் கொண்டநாடு
உலகத்து மக்களின் உள்ளத்தில் நிற்கும்நாடு
உத்தமன்கெனடி போன்ற உயர்தலைவர்கள் ஆண்டநாடு - இன்று
சாக்கடை நீரைப்போல நாறுதே உலகம் பூரா..
உடும்பதைக் கண்ட நாயாய் ஈராக்கை சுத்திசுத்தி
எண்ணைக் கிணற்றையே பிடிப்பதற்கு போரினைத்தானும் செய்து
மக்களை கொன்றுதினம் கொலைக்களம் ஆக்கிவிட்ட
உலகப்பொலிசண்ணர் செயலைத் தப்பென்று சொல்லி தண்டனைபோட
உலகத்தார் சபை நிமிர்வதெப்போ...!?
உலகத்து மக்கள் விளிப்பதெப்போ
நெஞ்சு பொறுக்குதில்லையே உலகஅரசியல் போலிகள் செயலைக்கண்டு

எங்கும் தீயாய் பரவிபதே எம்மின குருதி பெருகிடுதே
பொங்கும் துயரில் புதைகின்றோம் புதுகிளாலிக் கரையை அடைகின்றோம்.
கஞ்சிக் கலையமும் இழந்தாச்சு கசங்கிய கோவணம் கிளிஞ்சாச்சு
எஞ்சி இருப்பது எம்முயிர்தான் இன்னும் நாங்கள் வாழ்வதுவோ
என்றுகேட்ட மக்கள்தான் இன்றும் புலத்தில் வாழ்கின்றார்.
பட்டதுயரை நினைத்திட்டால் படும்மக்கள் துயரைப்போக்கிடலாம்
வீட்டைத்தேடி செல்கையிலே
நாளை புலமும் கலைக்கையிலே நீங்களும் தானே இருப்பீர்கள்!
விரைந்து வெளியில் செல்வோம்.
நெஞ்சு பொறுக்குதிலையே ஒருசில மக்களின் செயலைக்கண்டு!

புலத்தில் கோவில் கட்டுகின்றார் - வாசமில்லா
பூவால் பூசை செய்கின்றார்.
பல ஆயிரம் தேங்காய் உடைக்கின்றார்
அதற்காய்த் தானேதனிக்கடை வைக்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



தெய்வச் சிலையைத் தவிர அத்தனைக்கும்
விலை தொங்கவிட்டே வரிசையில் நிற்கின்றார்
ஆலயத் திருப்பணி என்கின்றார் களத்திலுள்ள
அனாதைப் பிள்ளைக்கு கரம்தர மறுக்கின்றார்.
நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த பக்தமானிடர் செயல்கண்டு!

தான்தேய்ந்து பிறருக்கு மணம் கொடுக்கும் சந்தணம்போல்
தனை அழித்து பிறருக்கு பயனளிக்கும் விதையைப் போல்
தானென்னும் நிலை மறந்து பொதுப்பணிக்கு
தனையீர்ந்து பணி கொடுப்போரை மட்டும் தலைவரென்போம்
வான்முட்டும் புகழுக்காய், பெருமைக்காய், பணத்துக்காய்
வாய்ச்சாலம் காட்டிவரும் மனிதர் தன்னை
விரட்டிடுவோம் விரட்டிடவே விதியைச் செய்வோம்!
நெஞ்சு பொறுக்குதிலையே இந்த பஞ்சோந்திமனிதர்
செயல்பார்க்கையிலே..!






படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



நாம் பிறந்த நாட்டின் நிலையை எண்ணி
வாடாத தமிழர் தமிழரல்லர்.எழுதாத
கவிஞர் கவிஞரல்லர். இரண்டையும் உண்மையாக்கிய பலரிலே
பொன்னண்ணா ஒருவர். அவர் அத்துடன் நின்றுவிடவில்லை.
நாடொன்றின் அல்லது இனமொன்றின் விடிவுக்கு முக்கியமானவை
இரண்டு. ஒன்று தலைமை. மற்றது ஒற்றுமை.
தலைமை தானே உருவாகுவது. எமக்கு உருவாகியும்விட்டது.
ஆனால் ஒற்றுமை இன்னும் கேள்விக்குறியே. அதனை
நன்குணர்ந்த கவிஞரின் வரிகள் நேர்வழி உரைக்கின்றன.

-க. இராஜமனோகரன்-

படிப்பகம்